காஞ்சி

ஆசிரியர்

வரவேற்கிறோம்

மலர் 1.] [ஆசிரியர். சி என். அண்ணாதுரை] [இதழ் 8

இந்தியப் பேரரசின் நிதிஅமைச்சர் T. T. கிருஷ்ண மாச்சாரியார் மலாசியா சென்றிருந்தார். அங்கு அவர் மேற்கொண்ட அலுவல் வேறு பல என்றாலும், மிக முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, இதழ்களின் செய்தியாளர்களிடம் கருத்தறிவித்திருக்கிறார்; வரவேற்கிறோம். இந்தியப்பேரரசு மலாசியா எந்தவிதமான குந்தகமுமின்றி நிலவிடவும் தழைத்திடவும் விரும்புகிறது என்பதனைக் குறிப்பிட்டுள்ளார். இது வழக்கமாக வழங்கப்படும் நல்லெண்ணம் மட்டுமல்ல என்று நம்புகிறோம். கிருஷ்ணமாச்சாரியார் எடுத்துக் கூறியது இந்தியப் பேரரசின் கருத்துதான் என்றும் நம்புகிறோம். தனிப்பட்ட கருத்தாகவோ, வெறும் நல்லெண்ணப் பேச்சாகவோ இருக்குமானால், பலனோ பொருளோ அதிகம் இருந்திட முடியாது.

மலாசியா அமைத்தது முதல், அதனைத் தூற்றியும் பகை கக்கிக்கொண்டும், பதுங்கித் தாக்கியபடியும் இருக்கிறார், சுகர்ணோ—இந்தோனிசியாவின் அதிபர்.

மலாசியாவை அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று முழங்குவதும், கலாம் எழ வழி செய்வதும், தொண்டர் படை திரட்டித் தாக்குவேன் என மிரட்டுவதும், கொரில்லாப் படையினரை ஏவிவிடுவதுமாக இருந்துவருகிறார் சுகர்ணோ.

சுகர்ணோ இந்தோனிசியாவில் ஈடு எதிர்ப்பற்ற நிலையில் இருந்துகொண்டு, ஆட்சி நடத்தி வருபவர்—ஜனநாயகத்தைத் தமது விருப்பத்தின்படி, தேய்த்தும் மாய்த்தும் வருபவர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் உரிமைகள், மக்களிடம் தொடர்பு கொண்ட அரசியல் கட்சிகளின் உரிமைகள், ஆட்சி மன்றங்களுக்கான உரிமைகள், பத்திரிகைகளின் அடிப்படை உரிமைகள் ஆகிய அனைத்தும், சுகர்ணோவினால் வெறும் கேலிக் கூத்தாக்கப்பட்டு வருகின்றன.

இந்தோனிசியாவுக்கான எந்தத் திட்டத்தை மேற்கொள்ளவும், கொள்கையை வகுத்துக் கொள்ளவும் அவருக்கே முழு அதிகாரம் இருக்கிறது.

நாட்டை விடுவித்தவர், அதற்காக வீர தீரப் போர் பல புரிந்தவர், டச்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விரட்டியவர் என்பதனால், அவருடைய செல்வாக்கு மிக மேலோங்கி இருக்கிறது. இஃது இயல்பும்கூட. இந்தோனிசிய மக்கள், தமது ஒப்பற்ற தலைவராக—வழிகாட்டியாக—அவரை ஏற்றுக்கொண்டனர், போற்றி வருகின்றனர். ஆனால் அவரோ, அந்தச் செல்வாக்கை, ஜனநாயக முறையையும் கருத்தையுமே சிதைத்திடப் பயன்படுத்திக்கொண்டு, 'சர்வாதிகாரம்' செய்து வருகிறார். இப்போது உலகிலே பல்வேறு நாடுகளிலே, இந்த விசித்திரமான ஆனால் வேதனை தரத்தக்க நிலைஏற்பட்டு விட்டிருக்கிறது. நாட்டை விடுவித்த மாபெருந் தலைவர் என்ற விருது பெற்றவர்கள், ஜனநாயக முறையினைச் சாய்த்துவிட்டு, தாமே சர்வாதிகாரம் செய்யத் தலைப்படுகின்றனர். அவர்களிடம் மக்கள் கொண்டுள்ள பற்று பாசம் காரணமாகவும், அவர்களைச் சுற்றி எழுந்துள்ள புகழொளி காரணமாகவும், ஜனநாயக உரிமைகள் அழிக்கப்படும்போதும், மக்களால் ஏன் என்று கேட்க முடியவில்லை, எதிர்த்து நிற்கும் ஆற்றல் எழவில்லை.

'சர்வாதிகாரம்' செலுத்துவதிலே எமக்கொன்றும் சுவை இல்லை—ஆனால் நாட்டின் நன்மைக்காக—நாடு எந்தப் பகைவனிடமும் சிக்கிச் சீரழியாதிருக்கவும்—உள்நாட்டிலேயே தேவையற்ற கருத்து மோதுதல்கள் காரணமாகக் குழப்பம் ஏற்பட்டு பொதுவலிவு குலைந்து விடாமலிருக்கவும், எல்லா அதிகாரங்களையும் நாங்கள் மேற்கொண்டு விட்டோம்! என்றே இவர்கள் அறிவிக்கின்றனர். ஆனால் இந்தப் போக்கு, உள்நாட்டில் மக்களை உரிமையற்றவர்களாக்கிவிடுவதுடன், பிரச்சினைகளை அலசிப் பார்க்கும் ஆர்வத்தையும் அறிவாற்றலையும் அழித்தொழித்து விடுகிறது—சுருங்கக் கூறுவதானால், ஜனநாயகம் எனும் பொறுப்பு மிக்க அரசியல் முறைக்கு ஏற்றவர்கள் என்ற தகுதியை மக்கள் இழந்து விடுகின்றனர்.

தமக்கு நேரடியாகத் தொடர்புள்ள, எண்ணிப் பார்த்திட இலகுவாக இருக்கக்கூடிய உள்நாட்டுப் பிரச்சினைகளையே ஆராயும் திறனழிக்கப்பட்டுப் போன நிலையில், வெளிநாட்டுடன் தன் நாடு மேற்கொள்ளும் தொடர்பும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் எங்கிருந்து அந்த மக்களுக்கு விளங்கிவிடப் போகிறது. அவர்கள் அவைபற்றித் தமது 'ஒப்பற்றதலைவர்' என்ன கூறுகிறாரோ அதுவே மறுக்கொணாத உண்மை, மீற ஒண்ணாத கடமை, என்று கொண்டுவிடுகின்றனர். இந்நிலை, 'சர்வாதிகாரம்' செலுத்திடும் தலைவர்களுக்கு மேலும் வலிவினைக் கொடுத்துவிடுகிறது. இந்நிலை இன்று இந்தோனிசியாவில் இருப்பதன் காரணமாகத்

தான், சுகர்ணோ கட்டுக்கு அடங்காத முறையிலும், சமரச நோக்கமற்ற தன்மையிலும், அமைதியைக் குலைத்து அமளி மூட்டிவிடத்தக்க விதத்திலும் முடுக்காகப் பேசவும் முரட்டுப்போக்கில் நடந்துகொள்ளவும் முடிகிறது. ஜனநாயகம் உயிரூட்டத்துடன் உள்ள நாடுகளில் இதுபோலத் தலைவர்கள் 'தர்பார்' செய்திட முடியாது—கேள்விகளை எழுப்பிடுவோர் உளர், எதிர்க்கக் கூடியவர்கள் உளர், பதவியினின்றும் அப்புறப்படுத்திவிடக் கூடியவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் உள்ளனர் என்ற நிலைமை, தன்னிச்சையாக நடந்துகொள்ள முனையும் தலைவர்களுக்குக் 'கடிவாளம்' ஆகிறது. டாக்டர் சுகர்ணோ கடிவாளமற்ற காட்டுக் குதிரையின் போக்கிலே நடந்துகொண்டு வருகிறார். எம்மிடம் படைபலம் அதிகம் என்கிறார். எமது விமானப்படை தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக வலிவானது என்கிறார். போர்வெறிப் பேச்சைக் கூச்சமின்றிக் கிளப்பியபடி இருக்கிறார். யாவை அழித்தொழித்தே தீருவேன் என்கிறார்.

இங்கிலையில், ஓராண்டே நிரம்பப் பெற்றுள்ள மலாசியா, தன் பக்கம்—நியாயத்தின் பக்கம்—நின்று பரிவு காட்ட எவரெவர் உள்ளனர் என்று கண்டறியத் துடிக்கிறது. மலாசியாவில் அந்நாட்டுடன் தம்மை முழுக்க முழுக்க இணைத்துக்கொண்டு விட்டுள்ள பல இலட்சக் கணக்கான தமிழர்களும். இந்திய பூபாகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவந்து குடியேறி உள்ளவர்களும் இருக்கின்றனர். மலாசியாவின் எதிர்காலம், பகைவர்களால் இடர்ப்பாடுள்ள தாக்கப்படாமல், நல்ல முறையிலே வளர்ந்து வளம் பொங்கிட வழி காண்பதிலே இவர்களுக்கு ஆர்வமும், பொறுப்பும், கடமையும் இருக்கிறது. எனவே மலாசியாவிடம் பரிவு காட்டி, அந்தப் புதிய அமைப்பைத் தகர்த்திட இந்தோனிசியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முறியடிக்க மலேசியாவுக்குத் தமது ஆதரவை நல்கிட இந்தியப் பேரரசு முன்வர வேண்டுமென, மலேசியாவினர் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் இயற்கை; நியாயம்.

இதனை உணர்ந்து கிருஷ்ணமாச்சாரியார், 'மலாசியா எந்த அண்டை நாட்டினாலும் அலைக்கழிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை, மலாசியாவின் வெற்றியிலும் நல்வாழ்விலும் இந்தியாவுக்கு நிரம்ப அக்கரை இருக்கிறது' என்று பரிவு காட்டிப் பேசியிருப்பதை பாராட்டி வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். மலேசியர்கள் இந்த ஆதரவு கண்டு பெருமகிழ்ச்சி கொள்வார்கள்.

மலேசியாவை அமைத்து நடாத்திச் செல்லும் துங்கு அப்துல் ரகிமான், அரசியல் நுண்ணறிவும், செயல் திறனும், நல்ல இதயமும் கொண்டவர். அவருடைய ஆட்சியிலே தமக்கு நல்வாழ்வு கிடைத்திடும் என்பதிலே, மலேசியாவிலுள்ள பல்வேறு இனத்தவரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். முடுக்குப் பேச்சும், உருட்டு விழியும், காட்டி மக்களை மிரட்டி அடக்கிடும் 'போர் உடை'த் தலைவராகத் துங்கு இருப்பவரல்ல. மக்களுடன் நன்கு பழகி, அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பணியாற்றும் பண்பாளர்.

மலேசியா சென்றுவரும் நண்பர்கள் இதுபற்றி மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

இந்தியப் பேரரசு, மலேசியாவிடம் பரிவு காட்டி ஆதரவு தெரிவித்திருப்பது, துங்கு அவர்கட்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய சீரிய முயற்சி வெற்றி பெற, நல்லறிவாளர் அனைவருமே வாழ்த்துகின்றனர்.

போர்வெறிப் பேச்சுடன் சுகர்ணோ நில்லாமல், மிகத் தரக்குறைவான, வெறுக்கத்தக்க முறையிலும் இறங்கத் துணிகிறார்.

முதலாண்டு விழாக் கொண்டாட்டம் மலேசியாவில் நடைபெறும்போது—சென்ற கிழமை—கலகங்களையும் அமளியையும் மூட்டிவிடப் போவதாக வதந்திகளை ஏவி, விழாவிலே பீதி ஏற்படச் செய்ய முயற்சி செய்தனராம்.

இப்படியும் ஒரு பெரிய நாட்டின் அதிபர், உலகத் தலைவர்களுடன் உறவுகொண்டாடும் தலைவர், செய்யக் கூடுமா என்று ஏற்படக்கூடிய ஐயத்தைப் போக்கிடும் முறையில், டாக்டர் சுகர்ணோ,

> மலேசியாவிலுள்ள சீனர்கள் கிளம்பி
> மலேசியாவை எதிர்த்துப் போரிட வேண்டும்.

என்று வெளிப்படையாகவே பேசியுள்ளார். கலாம் எழுவதனைக் காண்கிறோம்.

எத்தகைய வெறித்தனத்தைக் கிளப்பப் பார்க்கிறார் என்பதையும், ஒரு நாட்டுக்குள்ளே உள்ள இனங்களை ஒன்றோடொன்று மோதி அழிவினை வரவழைத்துக் கொள்ளத் தூண்டுகிறார் என்பதனையும் பார்க்கும் போது நேர்மையாளர்கள் அனைவருமே நெஞ்சு நடுக்குறுவர்.

ஒரு தனிப்பட்ட ஆள், வகுப்புவெறி மூட்டத்தக்கபடி பேசினாலோ எழுதினாலோ, பலாத்காரத்தை, அமளியை, கலகத்தைத் தூண்டிவிட்டாலோ, தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. ஆனால் இவைகளைவிட மிகப்பெரிய ஆபத்தினை மூட்டிடத்தக்க, இனவெறிப்பேச்சைக் கிளப்புகிறார் சுகர்ணோ; மலேசியாவை அழித்திடக் கிளம்புங்கள் என்று அந்நாட்டுக் குடிமக்களிலே ஒரு பகுதியினரான சீனர்களைத் தூபமிட்டுத் தூண்டுகிறார், உள்நாட்டுப்போர் மூண்டிடவேண்டும் என்ற கெடுமதி கொண்டு பேசுகிறார், அத்தகைய பேச்சினைத் தடுக்கவோ, பேச்சாளரை ஒடுக்கவோ, சர்வதேசச் சட்டம் இல்லை; சர்வதேச அமைப்பும் வலிவுடன் இல்லை. இது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

தமக்குள் எழக்கூடிய தகராறுகளை கலந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதும்,

ஒரு நாட்டினுடைய உரிமையைக் கெடுக்க மற்றோர் நாடு தாக்குதலை நடத்தினால், அது அக்ரமம் என்று கருதப்பட்டு, அக்ரமம் புரிபவரைத் தடுத்து நிறுத்திட மற்ற நாடுகள் முனைந்திட வேண்டும் என்பதும்,

எங்கும் எவரும் மனிதத் தன்மையை மாய்த்திடத் தக்க விதமான, கொலைக்கொலை, பண்பாடு அழித்தல், இனக்கொலை எழத்தக்க மாச்சரியம் ஆகிய தீய செயல்களில் ஈடுபடலாகாது என்பதும்,

அடிக்கடி ஐக்ய நாடுகள் மன்றங்களிலே, அரிய மேற்கோள்களுடனும் சீரிய நோக்குடனும், எடுத்துக் கூறப்பட்டு வருகின்றன.

எனினும், மலேசியாவில் உள்ள சீனர்களை, மலேசியாவை எதிர்த்துப் போரிடுங்கள் என்று சுகர்ணோவால் அச்சம் கூச்சமின்றி பேச முடிகிறது. பெரிய நாடுகளின் பெருந்தலைவர்கள் வேறு வேறு பெரிய பிரச்சினைகளிலே மூழ்கிக்கிடக்கிறார்கள்.

மலேசியாவினால், டாக்டர் சுகர்ணோவின் முயற்சிகளை முறியடிக்க முடியும் என்பதிலே நமக்கு ஐயமில்லை. அதற்கான வலிவு வழங்க பல அரசுகள் முனைந்து நிற்கின்றன என்பதும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், மலேசியாவுக்கு ஆதரவாக இந்தியப் பேரரசு இருக்குமென அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

சின்னாட்களுக்கு முன்பு மலேசியா பயணம் மேற்கொண்ட நண்பர் ராஜாராம் எம்.பி. இந்தியப் பேரரசின் ஆதரவும் பரிவும் தேவை என்பதனை மலேசியாவினர் தம்மிடம் எடுத்துக் கூறியதை, வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவரண்சிங் அவர்களிடம் எடுத்துரைத்தார். மிக்க அக்கரையுடன், அவர் பிரச்சினை விளக்கத்தைக் கேட்டறிந்துகொண்டார் என்று ராஜாராம் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கோலாலம்பூர், காமன்வெல்த் பொருளாதார மாநாட்டிற்காகச் சென்ற கிருஷ்ணமாச்சாரியார் பரிவு காட்டி, ஆதரவு தெரிவித்துப் பேசியிருப்பது, மலேசியாவினருக்குப் பெருமகிழ்ச்சி தந்திருக்கும். நமது ஆதரவு அவர்கள் பக்கம் இருக்கிறது என்ற செய்தி அவர்கள் மேற்கொண்டுள்ள பணியிலே மேலும் நம்பிக்கையுடன் ஈடுபட்டு வெற்றிகாண நிச்சயம் உதவும்.

★

என்ன செய்திடுவது

ஆண்டு பல காத்திருந்தோம், அமைச்சர்கள் வாக்குறுதி தந்தபடி இருந்தனர்.

ஏடுகள் யாவும் எழுதிவிட்டன, ஏன் இன்னமும் தாமதம் என்று கேட்டு.

நிபுணர் அறிக்கை வெளிவந்துவிட்டது; நேர்த்தியான திட்டம் என்று.

கருத்துக் குழப்பம் ஏற்படுத்தாதீர் — காலதாமம் செய்யாதீர் என்று முற்போக்காளர் அனைவரும் கனிவுடன் கூறிவிட்டனர்.

போராட்டம், கிளர்ச்சி வேண்டாம் — திட்டம் நிச்சயம் உண்டு என்று முழக்கமிட்டார் தொழில் அமைச்சர்.

இவ்வளவுக்கும் பிறகு, சேலம் உருக்காலை அமைப்பது பற்றி இப்போது எதனையும் நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை என்றும், ஆஸ்பட், விசாகபட்டிணம் ஆகிய இடங்களில் உருக்காலை அமைப்பதற்கான நிபுணர் அறிக்கை வெளிவந்த பிறகு, சேலம் திட்டத்துடன் அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து, மூன்றில் எந்த இடம் ஏற்றது என்று நிபுணர்கள் கூறுகிறார்களோ அங்குதான் உருக்காலை அமையும் என்றும்,

இதிலே பிரதேச உணர்ச்சி தலைகாட்டக் கூடாது என்றும், தென்னக முதலமைச்சர்கள்கூடி ஒரு முடிவு எடுக்கட்டும் என்றும்,

இரும்பு உருக்கு அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் கூறுகிறார்.

என்ன செய்யப்போகிறது தமிழக அரசு?

என்ன செய்யச் சொல்கின்றன தமிழக இதழ்கள்?

என்ன செய்யக் கருதுகின்றன, சேலத்தில் உருக்காலை நிச்சயம் இந்தத் திட்ட காலத்திலேயே அமைத்தாக வேண்டும் என்ற கருத்துகொண்ட கட்சிகள்?

பேசுங்கள், வெளிப்படையாக — ஏமாற்றத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறோமா—இல்லை எனில் தமிழக மக்களின் மனக்கொதிப்பைக் காட்டிட முனைந்திடப் போகிறோமா—சொல்லுங்கள்—ஒளிவு மறைவு இன்றி—தயக்கம் தடுமாற்றமின்றி.

ஒரு கட்சியை மற்றக் கட்சியின் மீது மோதவிட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியின் போக்குக்குப் பலியாகிவிடப் போகிறோமா—இல்லை—இல்லை — இது தமிழகத்தின் பொதுப் பிரச்சினை—இதிலே ஒன்றுபட்ட கருத்து — ஒன்றுபட்ட செயல் உண்டு என்பதனை ஆட்சியினருக்கு உணர்த்தப் போகிறோமா?

என்ன செய்திடுவது, எடுத்துச் சொல்லுங்கள்!

சேலம் உருக்காலை உண்டா இல்லையா என்பது பற்றிய கேள்வி எழுப்புவது மட்டும் பலன் அளித்திடாது.

இல்லை! என்பதைத் துணிவுடன் கூறுகிறார் சஞ்சீவியார்!

என்ன செய்திடுவது, எடுத்துச் சொல்லுங்கள்.

வாழ்க மணமக்கள்



அய்யம்பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மு. கோவிந்தராஜி அவர்கள் மகன் மு கோ. பெருமாளுக்கும் திரு. தி. மு. குமாரகாளத்தி அவர்கள் மகள் உமாராணிக்கும் 15—7—64 அன்று அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

தம்பி

புதிய படை புறப்படுகிறது!

பகைவர்கள் படை எடுத்துப் புயலெனப் புகுந்திட முனையும்போது, நாட்டைக் காத்திடவும் பகையை முறியடித்திடவும் வகுக்கப்படும் போர்முறைகளில் வல்லவர்கள், எந்தப் படையை எந்த முறையில் எந்த நேரத்தில் எவ்விதமான போரிட எங்கு அனுப்பிவைப்பது என்பது குறித்து எடுத்திடும் முடிவினைப் பொறுத்தே வெற்றியா தோல்வியா என்பது இருக்கிறது.

படைகள் போரிடத்தான் உள்ளன; எந்தப் படையிலும் பயிற்சி பெற்ற போர் வீரர்களே உள்ளனர்; அதிலே எவருக்கும் ஐயம் இல்லை. ஆனால் பெற்றிடும் பயிற்சியில், வகையும் தரமும் உண்டு. எந்தப் படையினரும் எதிர்த்துப் போரிடுவதிலே அஞ்சாது நின்றிடவும் ஆபத்தைத் துச்சமென்று எண்ணிடவும் இயல்பும் பயிற்சியும் பெற்றுள்ளனர். ஆனால் படையில் ஒவ்வோர் பிரிவினருக்கென்று ஒவ்வோர் விதமான பயிற்சி தரப்படுகிறது; ஒவ்வோர் விதமான போர்முறைக்கும் அதற்குத் தக்கதான பயிற்சி இருக்கிறது.

கோட்டைக் கொத்தளங்களைத் தாக்குவது, கோட்டை கொத்தளங்களைத் தாக்குதலிலிருந்து காத்திடுவது எனும் இருவேறு செயலிலும், தீரம் வீரம் நிரம்பத் தேவை; ஆனால் இருவேறு செயல்களிலே ஒவ்வொன்றுக்கென்று ஒவ்வோர் முறை உளது; அந்த முறையில் பயிற்சி பெற்றார்க்கே அந்தத் துறையும் பணியும் தந்திடுதல் வேண்டும்; முழுப் பயன்பெற.

வாள் வீச்சிலும் பழக்கம் உண்டு எனினும் இவன் வேல் எறிவதிலே தன்னிகரற்றவன் எனின் அன்னானை அதற்கே அனுப்பி வைத்தால் வெற்றி ஈட்டிட வழி செய்ததாகும். வாட்போர் அறியானோ இவ்வீரன்! அறிந்துள்ளான்! எனவே வாட்போர்ப் படையிலே சேர்ந்து போரிடட்டும் என்று கட்டளையிடலாம்; அவனும் வாளினைச் சுழற்றிப் போரிடலாம்; ஆனால் அவன் வேல் எறிவதனால் கிடைத்திடும் பலன் கிடைத்திடாது.

அன்பும் அறமும் நிலவிட வேண்டும், பண்பு மிகுந்திட வேண்டும் என்பதிலே நாட்டம் கொண்டவரே, வள்ளுவர், எனினும் அறம் அழிப்போரும் பண்பு கெட்டோரும், அமைதி குலைப்போரும் ஆகா வழி நடப்போரும் உள்ளனரே; அவர்களால் அமளி மூட்டப்பட்டுவிடுமானால், அறவுரை கூறிடல் பயனளிக்காதே; எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றன்றோ இன்னல் விளைவித்தவர்களை அடக்கிட இயலும் என்பதனை எண்ணிப் பார்த்திட மறுத்தாரில்லை, மாறாக அது குறித்து எண்ணி எண்ணிப் பார்த்து ஏற்புடைய கருத்துகள்பலவற்றைக் கூறியுள்ளார், அந்தக் கருத்துகளைக் காணும்போது, என்னே இந்த வள்ளுவர்; வாலறிவன் நற்றாள் தொழுவது பற்றித்தான் கூறினார், அதிலேவல்லவர் என்று எண்ணிக்கொண்டோம்; இதோ போர்முறை குறித்து



இத்துணை நுண்ணறிவு கொண்டு வழி காட்டுகின்றாரே போர்க்களம் பல கண்டவரோ! என்று எண்ணிடுவோம் வியந்திடுவோம். அஃது அவருடைய தனிச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இன்னவன் இதனை முடித்திட வல்லவன் என்பதனைக் கண்டறிந்து, அதனை அவனிடம் விடல்—என்பதனை எல்லாத் துறைகளுக்கும் ஏற்றதெனக் கூறி வைத்தார்; அஃது போர்முனைத் துறைக்கும் பொருந்தும்; எனினும் போர்முறை குறித்தே ஆய்வுரை பல கூறியுள்ளார்.

இருக்கட்டும் அண்ணா! இப்போது எதற்காகப் போர்முறை பற்றிப் பேசுகின்றாய்—நாம் நடாத்தி வருவதோ அறப்போர்-நம்மை எதிர்ப்போர் நடத்திடுவதோ அக்கப் போர்—நீ கூறிடத் தொடங்கியதோ களம் நின்று போரிடும் முறை பற்றி; எதற்காக? என்று கேட்கின்றாய்! கேட்பது மட்டுமா, தம்பி! அண்ணன்தான் பயந்தவன் ஆயிற்றே, பாரேன் போர் முறை பற்றி இத்தனை பேசிடும் வேடிக்கையை என்றெண்ணி உள்ளூறச் சிரித்திடவும் செய்கின்றாய்! அறியேனா!!

தம்பி! இன்று எனக்கு போர்—போர் முறை—படை—படை வகை—பயிற்சி—பயிற்சிக்கேற்ற படை வகை—என்பனபற்றிய எண்ணம் பிறந்தது. மலாசியாவைத் தாக்கிட சுகர்னோ முனைகிறார் என்றோர் பக்கம் செய்தி! வியட்நாமில் அமளி — குழப்பம் — என்றோர் செய்தி! அமெரிக்கக் குடி அரசுத் தலைவராவதற்காகத் துடித்திடும் கோல்ட்வாடர் என்பவர், பொதுஉடைமை நாடுகளுடன் போரிட்டாக வேண்டும் என்று வெறிப் பேச்சு கிளப்பிடும் செய்தி! இப்படிப் பல பார்த்ததால், எனக்கும் போர் பற்றிய எண்ணம் பிறந்தது போலும் என்று எண்ணிக்கொண்டிருப்பாய். என் எண்ணம் இந்தச் செய்திகளைக் கண்டதனால் எழுந்ததுமல்ல. வேறென்ன என்கிறாயோ! புதியதோர் படை புறப்படுகிறது-வாளேந்திப் போரிட அல்ல-புனிதப் போர் புரிய! அது பற்றிப் படித்தேன்—அருமையான ஓர் ஆய்வுரையும் இது குறித்து வெளிவந்திருந்தது, பார்த்தேன்; பார்த்திடவே, போர் பற்றிய பொதுவான எண்ணம் எழுந்தது.

தம்பி! பெருமழையால் ஏரி குளம் குட்டைகள் நிரம்பி, எங்கும் சேறும் சகதியுமாகிவிட்டால், தவளைக் கூட்டத்துக்குக் கொண்டாட்டமல்லவா! கேட்போர் காதினைத் துளைத்திடத்தக்க கூச்சல் எழுப்பும், தூக்கத்தைக் கெடுக்கும்.

ஒருகுற்றமும் நாம் செய்தோமில்லை, இந்தத் தவளைகள் நமக்கு இத்தனை தொல்லைகொடுத்திடத் துணிந்தனவே! எத்தனை பெரியசத்தம்! ஓயாத கூச்சல்! காதைத்துளைத்திடும் சத்தம்! என்ன எண்ணிக்கொண்டன இந்தத் தவளைகள்! கூச்சலிடுவதிலே நம்மை மிஞ்சுவார் எவரும் இல்லை என்று எண்ணிக்கொண்டு, மண்டைக்கனம் கொண்டுவிட்டனவோ! வலிய வம்புக்கு இழுக்கின்றனவே! விடக்கூடாது இந்தத் தவளைகளை!! என்று எண்ணி, ஒருபடை திரட்டிக்கொண்டு கிளம்பி, தவளைகள் கூச்சலிடும் குளம்குட்டை ஓரம் நின்று, நாமும் கூச்சலிடுவோம், உரத்த குரலில்; ஓயாமல்! நமது குரலொலி தமது குரலொலியைவிடப் பயங்கரமான அளவு உளது என்பதனை, இந்த புத்தி கெட்ட தவளைகள் உணரட்டும்; உணர்ந்து வெட்கத்தால் வாயடைத்துப் போகட்டும்! என்று கூறிக்கொண்டு, அதனையே போர்முறையாக்கிக்கொண்டு, 'கூவும்படை'யாகி கூச்சல் கிளப்பிடுவார் உண்டோ!! இல்லை! ஆளுக்கொரு கல் வீசி தவளைகளைக்கொன்று போடுவோம் என்று கிளம்பிடுவார் உண்டோ! இல்லை என்பாய். பொதுவாக, அதுபோல் செய்திட ஒரு திட்டம்போட்டுக் கொள்வார் இல்லை. ஆனால் பிரான்சு நாட்டிலே இவ்விதமான வேலைத்திட்டம் இருந்தது; புரட்சிக்கு முன்பு. ஆமாம், தம்பி! வேடிக்கை அல்ல நான் கூறுவது; வரலாற்றிலிருந்து எடுத்தளிக்கும் துணுக்கு. சீமான்கள் கொட்டமடித்துக்கொண்டிருந்த நாட்கள்! சாவு வரவில்லையே, சர்வேசா! என்று ஏழைகள் அழுதுகிடந்த காலம். தவளைகள் கூச்சல் கிளப்புவதால் சீமானின் தூக்கம் கெடுமல்லவா! சீமானின் தூக்கம் கெட்டால், உடம்பு என்னாவது! அவன் உடம்புபோனால் நாட்டின் உயிர் எப்படி இருக்கும்!! இவ்விதமான எண்ணம் அரசியல் கருத்தாக இருந்துவந்த காலமது. அப்போது இரவுக் காலங்களில், சீமான் பஞ்சணையில் படுத்திடுவான்; காடு கழனியாக்குபவர்கள், கல்லும் தடியும்கொண்டு தவளைகளைத் தாக்கியபடி இருப்பராம், இரவெல்லாம்; கூச்சலிடும் தவளைகளைக்கொல்வராம். இது, சீமானின் தூக்கத்துக்கான பாதுகாப்புப்படை! என்ன தருவார் சீமான்? என்று கேட்கிறாய்! கொல்லாமல் விட்டுவைத்திருக்கிறாரே, போதாதா!!

செருக்குமிக்க சீமான்கள்காலத்துப் படைபோன்றதோர் படை இதுபோது எங்கேனும் அமைந்துளதோ, அதுபற்றியோ அண்ணா! நீ கூறுவது என்று கேட்கிறாய். இல்லை, தம்பி! இல்லை! நான் குறிப்பிடும் படை, சீமான் அமைத்தது அல்ல; சீமான்களுக்காகவும் அல்ல! ஏழைகளுக்கு இதம் செய்ய ஏழை பங்காளர் அமைத்த படை!! எது அது என்கிறாய். பொறு, கூறுகிறேன்; கூறுமுன், வேறோர் படை ஒன்று காட்டுகிறேன்.

தஞ்சைத்தரணி! அதனை வடபுலத்து முஸ்லீம் மன்னர் படை தாக்க வருகிறது; பாய்ந்துவருகிறது; பெரும் படை—போரிடுவதிலே ஆற்றல்மிகக்கொண்ட படை.

தஞ்சை மன்னன் கைகட்டி வாய்பொத்தி இருப்பானோ! நாடு காத்திடும் கடமை உணர்ச்சி அற்றவனோ! மன்னன்!!

கை ஒலி எழுப்பினான், எதிர்வந்து நின்றனர் ஏவலர். கட்டளையிட்டான். கடுகிச் சென்றனர் நிறைவேற்ற.

படையொன்று கிளம்பிற்று; பறித்திட, ஒடித்திட, குவித்திட, வீசிட, பரப்பிட!

எதிரிகளைக் கண்டதுண்டமாக்கி வீசிட, அவர்களின் படைக்கலன்களைப் பறித்திட, வாட்களை ஒடித்திட, தஞ்சை மன்னனின் கட்டளை பெற்றபடை முனைந்தது என்று எண்ணுகின்றாய்.

தம்பி! ஒடித்தனர் பறித்தனர், 'வீசினர்!! ஆனால் எதிரிப்படையினரை அல்ல—பகைவர்களை அல்ல. காடென வளர்ந்திருந்த துளசிச் செடிகளை!!

ஏன்? என்கிறாய். மறுகணம் எண்ணிக்கொள்கிறாய், எதிரி அறியாவண்ணம் பாய்ந்து சென்று தாக்கிட புது வழி அமைக்கின்றனர் போலும்; அதற்கே

காடழித்துப் பாதை போடுகின்றனர் என்றெண்ணிக் கொள்கின்ருய். அது அல்ல நடந்தது. துளசிச் செடிகளைப் பறித்தெடுத்துச் சென்று, எதிரிப்படை நுழையும் பாதையிலே !வீசிடுக! பரப்பிடுக! துளசியைக் காலால் மிதித்துக்கொண்டு வருவது 'மகாபாபம்!' இதனை உணர்ந்து பகைப்படை வந்தவழியே திரும்பிப் போய்விடும்!!—இது மன்னன் கட்டளை—போர்முறை.

இதனை நான் வரலாற்றுச் செய்தி என்று கொண்டிடவுமில்லை, கூறிடவுமில்லை. அந்த நாள் நிலையினைக் காட்டிட கட்டிவிடப்பட்ட கதை என்றே கொள்கின்றேன்; ஆனால் கருத்தே அற்றது இது என்று தள்ளிட மாட்டேன்—ஏமாளி மன்னன் இதுபோல், :பொருளற்ற போர் முறையை மேற்கொள்வான் என்ற கருத்தினைத் தருவது இந்தக்கதை.

துளசிச்செடி, இந்து மார்க்க வைதீகர்கட்கு, மகிமை வாய்ந்தது; புண்யம் பெற்றுத்தருவது, கண்களில் ஒத்திக்கொள்வதும், தலையில் சூடிக்கொள்வதும் நீருடன் கலந்து பயபக்தியுடன் உட்கொள்வதும், இந்து மார்க்கத்திற்கு ஏற்பட்டது. துளசி மாலையாமே மகாவிஷ்ணுவுக்கு!!

துளசியை மிதித்துவிட்டால், போதும், பாவம் ஏழெழு ஜென்மத்துக்கும்விடாது! சாஸ்திரத்தைக் கூறினேன், தம்பி! சாஸ்திரத்தை!!

இப்படி உள்ள ஒரு சாஸ்திரம் பொருள் உள்ளது, தேவைப்படுவது என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், தம்பி! இந்து மார்க்கத்து வைதீகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த நம்பிக்கையை, முஸ்லீம் படை மதிக்குமா, ஏற்றுக்கொள்ளுமா என்று அந்த மன்னன் எண்ணிடவில்லை. வீசு துளசியை! விரண்டோடுவர் பகைவர்!! என்று கட்டளையிட்டார். பச்சைப் பசேலென ஏதோ தெரிவது கண்டு, பகைவர்களின் குதிரைப்படை மேலும் வேகமாகப் பாய்ந்ததாம் அந்த மன்னனின் ஆட்சி வீழ்ந்ததாம். சொல்கிருர்கள்.

எதிரிப் படையை விரட்ட வழியிலே துளசியை வீசினதுபோல, இப்போது நாட்டிலே தலைவிரித்தாடும் அக்ரமத்தை ஒழிக்க, அநீதியைத் தொலைக்க, ஒரு புதுப் படை புறப்பட்டிருக்கிறது. எது அந்தப் படை? எவர் திரட்டியது? எங்கு உளது? என்று கேட்கிருயோ, தம்பி! முதலில் எங்கு உளது? எது அந்தப் படை? என்பதற்குப் பதில் கூறிவிடுகிறேன். 'காஞ்சி' இதழின் அட்டைப் படத்தை ஒருமுறை பார்! பார்த்தனையா? என்ன காண்கிருய்? சாதுக்களை! அல்லவா!! அந்தப் படைதான் தம்பி, புதிதாகக் கிளம்பியுள்ள படை! நந்தா திரட்டி அனுப்பியுள்ள படை!! ஊழல், ஒழுங்கீனம், இலஞ்சம் கொள்ளை இலாபம், கள்ளச்சந்தை, புரட்டு புனைசுருட்டு எனும் சமூகக் கொடுமைகளை எதிர்த் தொழித்திடுக என்று கட்டளையிட்டு. நந்தா இந்த சாதுக்கள் படையினைத் திரட்டி அனுப்பிவைக்கிருர்.

உள்துறை அமைச்சர் இந்த நந்தா! நல்லெண்ணம் மிகக்கொண்டவர் நாணயமானவர் என்கிருர்கள். சமூகக் கேடுகளைக் களைந்தாக வேண்டும் என்ற உறுதி கொண்டவர்; சூள் உரைத்து சுறுசுறுப்பாகப் பணியாற்ற முனைந்திருக்கிருர். அதற்காக அவரை எவரும் பாராட்டுவர். நோக்கம் நேர்த்தியானது! ஆனல் முறை? துளசி அல்லவா கொட்டச் சொல்கிருர் பகைவர் நுழையும் பாதையில்! சட்டம், போலீஸ் ஆகியவைகளின் கண்களில் மண்ணைத் தூவிடும் கைதேர்ந்தவர்களைக் கண்டறிந்திட, காவி கட்டிய ஜெபமாலைகளை அல்லவா ஏவுகிருர். வேண்டும் வேண்டும் பெரும் பொருள் வேண்டும்! பிறர் பொருள் எனினும் பிழையில்லை, வேண்டும்! உழைத்திடாமலே பொருள் குவித்திட உண்டு பல வழி, அனைத்தையும் அறிவோம்! என்று கூறிடும் கொடியவர்களை அடக்க, பணம் ஆட்கொல்லி! பாபச் சின்னம்! வாழ்வு மாயை! ஓர் வஞ்சக வலை! உலகு மாயை, அழியத்தக்கது, அழியாதது ஒன்று உண்டு, அது அங்கே! நிர்மலமான ஆகாயத்தை நோக்கு, நீசத்தனமிக்க உலகை நம்பாதே!! என்ற உபதேசம் பெற்றும் கொடுத்தும், கட்டற்று, கவலையற்று, காசு பணம் வேண்டும் என்ற அவசியமற்று, காலைக் கட்டிக்கொண்டு அழும் மனைவியும், காகூவெனக் கூவி அழும் குழந்தைகளும், கடன்பட்ட நெஞ்சமும் கொண்டிடாத காவிக் கோமான்கள்தானு கிடைத்தார்கள்! துளசி வீசுகிருரே நந்தா; பகைவன் நுழையும் பாதையில்!!

சாதுக்களைக் கண்டதும் காலில் வீழ்ந்திட, கன்னத்தில் போட்டுக்கொள்ள, வரம் கேட்டிட சமாராதனை நடத்திட, இன்றும் இங்கு நிரம்பப்பேர் உள்ளனர்—இல்லை என்று கூறிடவில்லை. அதிலும் வடக்கே உள்ள சாதுக்கள் ஒரு படை அளவு உள்ளனர்—படை வீரர் போன்ற கட்டுடலும் இருக்கிறது; பார்த்துமிருக்கிறேன்.

தம்பி! அரித்துவாரத்தில் பார்த்தேன், அழகிய கங்கைக்கரை ஓரம் முழுவதும், அரண்மனைகளோ என்று வியந்திடத்தக்கதான மடங்கள்-சாதுக்களுக்கு. எத்தனை சாதுக்கள் எத்தனை நாட்களுக்கு, என்னென்ன கேட்டாலும் தந்திட, வழிபட்டிட, அங்கு ஏற்பாடுகளைச் செய்துவைத்துள்ளனர் சீமான்கள், சிற்றரசர்கள்; வணிகக் கோமான்கள், வாழ்வுக்கலை வல்லவர்கள்! மாலை வேளையில், இந்த சாதுக்கள், ஒரு கவலையுமற்று—(இந்த உலகம்பற்றிய கவலை) உலவுகிருர்கள். ஒருசமயம் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கவலை மேலுலகம்பற்றியதாக இருக்கலாம்-மேலுலகில் இங்கு உள்ளது போன்ற ஏற்பாடுகள் உண்டோ இல்லையோ என்ற கவலை.

கோதுமையும், நெய்யும், :சர்க்கரையும், பருப்பும், பாலும் பழமும் கிடைக்கிறது ஒவ்வொரு வேளையும். பரமனைப்பற்றிய தியானத்தில் ஈடுபடுகிருர்கள். ஏன் முடியாது!! பசிப்புலி அடக்கப்பட்டதும், புண்ணியம் பற்றிய நினைப்பு சுரக்கிறது. சாதுக்கள்போல 'சம்சாரிகள்' இருக்க முடிகிறதா! பாலுக்குச் சர்க்கரை கூட அல்ல, கூழுக்கு உப்பு போதுமான அளவு இல்லையே என்ற கவலை குடையும்போதும், சாதுவாக இருக்க முடிவதில்லை, சாமான்யர்களால் — கோபம், தாபம், குமுறல் கொதிப்பு, பகை பயம், அடிமைத்தனம் அக்ரம நினைப்பு எல்லாம் குடிபுகுந்து விடுகின்றன—போக்கிரியாகிருன், திருடனுகிருன், வெறியனுகிருன், வெகுண்டெழுகிருன், சாதுவாக இருக்க முடிவதில்லை. சாதுவின் வாழ்க்கை நிம்மதியாக இருப்பதற்கான பொறுப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வதால், சாது சாதுவாக இருந்திட முடிகிறது. வாழ்ந்திட வழி அமைத்துக் கொடுத்திட வேறு சிலர் பொறுப்பேற்றுக் கொள்வதனுல், இவர்கள், வாழ்வு என்றுல் என்ன? அது உண்மையா, மாயையா? இவ்வுலக வாழ்வு நித்யமா அனித்

யமா? என்பன பற்றி சிந்திக்கவும்—சிரவணம் செய்யவும் முடிகிறது.

இந்த நிலையிலேயும், சாதுக்கள் சாதுத்தன்மையை விட்டு வெகுதூரம் விலகி, காமக்குரோத மதமாச்சரியங்களால் ஆட்டுவிக்கப்படும் வெறித்தன்மை கொண்டுவிடுவது பற்றிய செய்திகளும் அடிக்கடி வெளிவருகின்றன.

பெரியசாமிக்கு விஷம்கொடுத்த சின்னசாமி, பீடத்தைப் பெயர்த்தெடுத்த சாமி, பெண்ணைக் கடத்திச் சென்ற சாமி, மண்ணில் பொன்னை மறைத்த சாமி, மரக்கரி உணவை மறுத்த சாமி, கரியைப் பொன்னாய் ஆக்கும் சாமி, காளியை ஏவல் கொள்ளும் சாமி, காட்டு மாளிகை கட்டிடும் சாமி, கன்னியர் கலங்கிட நடந்திடும் சாமி, கோர்ட்டு வாசலில் இருந்திடும் சாமி, கொடுத்ததை மறைத்திடும் குட்டிச் சாமி, கிருமிக் கூடாய் ஆகிடும் சாமி, என்று எத்தனை எத்தனையோ வகையினர் உளர்.

வடக்கே நடைபெறும் கும்பமேளாக்களின்போது; தம்பி! இந்த சாதுக்கூட்டம் கோலாகலமாக பவனி வருவதுண்டு. பல்லக்கில் ஏறிடும் சாமி, குதிரை ஏறிடும் சாமி, யானைமீது அம்பாரி அமைத்து அதிலே பவனி வந்திடும் சாமி; உடலை மறைத்திட உடை தேடாது, உள்ளது காண்க என உலவிடும் சாமி, முகாம் அமைத்து முழ்ங்கிடும் சாமி, யாகம்வளர்த்திடும் பெரிய சாமி, இவ்விதம் பலர் அரசோச்சுகின்றனர், அந்த கும்பமேளாக்களில். உடை அணியா உருவங்களைத் தெரிசிக்க, விழுந்தடித்துக்கொண்டு செல்லும் இலட்சக்கணக்கான பக்தர்களில் சிலர், இடிபட்டு மிதிபட்டுச் செத்தனர் என்றும் செய்தி வந்திருக்கிறது.

உள்ளதில் கெட்ட தெதுவோ அது மட்டுமே உன் கண்களில் படுகிறது; உண்மைச் சாதுக்களே இல்லையோ என்று என்னைக் கேட்பர், தம்பி! நான் சொல்லக்கூடியது இதுவே, உண்மைச் சாதுக்கள் மிக மிகக் குறைவு, உடையார் சாதுக்களாக உள்ளோரே மிக அதிகம்; உண்மை சாதுவைக் கண்டறிவதும் கடினம் என்று குடிஅரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்றகிழமைதான் பேசியிருக்கிறார்—திருத்தணியில் என்று நினைக்கிறேன்.

உண்மைச் சாதுவைக் கண்டுபிடிக்கிறோம் என்றே வைத்துக்கொள் அவர்கள், நந்தா கூறிடும் வேலைகளையா மிக முக்கியமானது எனக்கருதுவர். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பின் தன்மை, மகிமை ஆகியவற்றிலே மனதைச் செலுத்திக்கொண்டு இருக்கும் சாதுக்களிடம் நந்தா, நியாய விலைக்கும் அனியாய விலைக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றியும்: சந்தைக்கும் கள்ளச்சந்தைக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ஆராய்ந்தறிந்து நல்வழி காட்டுக! என்று கூறினால் என்சொல்வர்! பாலகா! உலக மாயை எனும் இருளில் சிக்கிச் சீரழிகிறாய்! சந்தை என்கிறாய் கள்ளச் சந்தை என்கிறாய்! பொருள் என்றாய் விலை என்றாய்! இந்த உலகமே சந்தை! கள்ளச் சந்தை! மாயச்சந்தை! பரம்பொருளன்றி மற்றவை பொருளே அல்ல! இதனை அறிந்திட நீ தரவேண்டிய விலை, நிராசை! போ! போக போகாதிகளில் ஈடுபடும் சுபாவத்தை மாற்று இந்திரியச் சேட்டைகளை அடக்கு! இகத்தை மற! பரத்தைத்தேடு!

ஓம் தத்சத்! என்று கூறுவரேயன்றி, ஒயிலூர் கடைத் தெருவில் ஒன்பதாம் நம்பர் கடையில் அறுபது மூட்டை சீனியை ஒளித்துவைத்திருக்கிறான் கங்காதரன் என்ற தகவலைச் சேகரித்துக்கொண்டு வந்து தருவார்களா!

உண்மைச்சாது இந்த உலக விவகாரத்தில் தன்னைச் சிக்கவைத்துக்கொள்ளமாட்டார்.

சிக்கவைத்துக்கொண்டு சீர்செய்வேன் என்று செப்பிடும் சாது உண்மைச் சாதுவாக இருந்திட இயலாது.

என்றாலும் குல்ஜாரிலால் நந்தா மெத்த நம்புகிறார், சாதுக்கள் படை திரண்டால் சகல கேடுகளும் ஒழிந்திடும் என்று. அவ்வளவு நம்பிக்கை துளசியின் மகிமையில்! வீசுகிறார் பகைவன் நுழைந்திடும் பாதையில்.

தம்பி! உங்கள் அண்ணாத்துரைக்கு சாது சன்யாசிகள் என்றாலே பிடிக்காது, அதனால் இதுபோலக் கூறுகிறான் என்பர் சிலர்.

நான் கூறியிருப்பதைவிட வேகமாக, வெளிப்படையாக, சாதுக்களைப் படைதிரட்டும் ஏற்பாட்டினைக் கண்டித்து சிந்தனையைத் தூண்டிச் செம்மைப்படுத்தத்தக்க சீரிய முறையில் இந்தக் கிழமை இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், நயனதாராசாகால் என்பார் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

திருமதி விஜயலட்சுமி பண்டிட் திருமகளார் ஒருவருக்கு நயனதாரா என்று பெயர்; கட்டுரையாளர் அவர்கள்தான் என்று எண்ணுகிறேன்.

துணிவும் தெளிவும் துள்ளுகிறது நயனதாராவின் கட்டுரையில்! இடித்துரைக்க ஏளனத்தையே கருவியாக்கிக்கொண்டுள்ளார். இலட்சிய மணமும் கமழ்கிறது கட்டுரையில்; புத்துலகம் காணவேண்டும் என்ற துடிப்பு பளிச்சிடுகிறது.

> எந்த நவயுக உலகில் ஓரிடம் பெற நாம்
> போராடிக்கொண்டு வந்தோமோ அந்த உலகு
> வேகமாக, வண்ணம் மிகக்கொண்டதாக
> மாறிக்கொண்டிருக்கிறது — ஜெட்விமான
> வேகத்தில் செல்கிறது. வேறெந்த காலத்
> தைக் காட்டிலும் நன்மை மிக அதிகமாக
> அறைகூவி அழைத்திடும் இந்தக் காலத்தில்,
> உலககிருகத்தில், விஞ்ஞானம் புரட்சியை—
> ஏற்படுத்தியபடி இருக்கிறது. இந்தச் சூழ்
> நிலைக்கு ஏற்றபடி ஆகிக்கொண்டு வருகின்
> றனர். எங்கெங்கும் உள்ள மக்கள்—ஆனால்
> நாம் அல்ல! நாம் மீண்டும், பழய கட்டை
> வண்டிக்காலம் போதுமென்ற நினைப்பு
> கொண்டு, கர்நாடகயுகத்தை நோக்கிப் பய
> ணம் செய்யத்தொடங்கிவிட்டோம்—பின்
> னோக்கி!! மூடு பனி விலகுகிறது தற்காலிக
> மாக, தேசிய அரங்கிலே புதிய நட்சத்திரமாக
> சாது வந்துள்ளார், காண்பீராக!!

துவக்கமே தம்பி! துணிவுதுள்ளும்விதமாக அமைந்துவிடுகிறது.

> கட்டைவண்டிக்காலம்
> பின்னோக்கிப்பயணம்
> கர்நாடகயுகம்

என்று இடித்துரைக்கிறார், நயனதாரா. கடுமையான கோடைவெப்பத்தைத் தணித்திடும் பூங்காற்றுபோல, ஒதியமரங்களுக்கு மத்தியில் ஓர் சந்தனத் தருபோல, ஓட்டை ஒடிசல்களுக்கு மத்தியில் கிடந்திடும் ஓர் நல் முத்துபோல, பழமை, பண்டைப்பெருமை, பரதேசிகளின் பரிபாலனம் என்பனபற்றி எல்லாம் பெரிய இடத்துள்ளார் பேசிடும் இந்த நாட்களில், உலகம் விஞ்ஞானத்தின் உன்னதத் தன்மையினைத் துணைகொண்டு வேகமாக, முன்னேற்றப் பாதையிலே செல்கிறதே, உதவாக்கரைகளே! பெற்றதையும் இழந்துவிடும் பேதமைபோல, அடைந்துள்ள ஓரளவு முன்னேற்றத்தையும் இகழ்ந்துவிட்டு, பின்னோக்கிச் செல்கிறீர்களே! கட்டை வண்டிக் காலத்தின்மீது மீண்டும் மோகமா? என்று கேட்கிறார். கோபம் பொத்துக்கொண்டுதான் வரும், பழமை விரும்பிகளுக்கு. அதிலும் இடித்துரைப்பது என்போன்றவன் எனில் எரிதழலாகுவர். ஆனால் கட்டுரையாளரோ, நானல்ல.

> பின்னோக்கி நடத்திடும் இந்தப் பயணத்தில் ஒரு கட்டம் சென்றிடுவோம்—நமது நிர்வாகத் துறைகளிலே சாதுக்கள் வேலைக்கு அமரும் கட்டம்! நமது வெளிநாடுகள் குறித்த விவகாரத் துறையிலும்!!

என்று கூறிக் கேலி செய்கிறார் நயனதாரா.

போகிற போக்கைப் பார்த்தால் இவ்விதந்தான் இருக்கிறது என்பதைச் சிலரேனும் உணர முடிகிறது. பற்றற்றவர்கள் சாதுக்கள், இவர்களைப் பரிபாலனத் துறையில் ஈடுபடுத்தினால், ஊழல், ஒழுங்கீனம், இலஞ்சம் போன்றவைகள் நெளியாது என்றும் எண்ணிடத் தோன்றும். ஊழலையும் ஒழுங்கீனத்தையும் இலஞ்சத்தையும் முறைகேட்டினையும் கண்டறிந்து ஒழித்திட வல்லவர்கள் சாதுக்களே என்ற எண்ணம், வளர வளர ஊழலைச் செய்திடுவோர் எவர்? சம்சாரிகள்! ஏன்? அவர்கள் ஆசைக்கு ஆட்பட்டவர்கள்! ஆசைக்கு ஆட்பட்டவர்கள் வேலைகளில் உள்ள மட்டும், ஊழல் இருக்கத்தான் செய்யும். எனவே ஆசைகளைத் துறந்த சாதுக்களை, சர்க்கார் அதிகாரிகளாக்கிடுவோம்–ஊழல் ஏற்பட வழியே எழாது என்ற எண்ணம் உருவாகிடத்தான் செய்யும். எங்கும் எவரும் இதுபோல எண்ணிட மாட்டார்கள் என்றுரைப்பர், தம்பி! இதுபோல எண்ணியது மட்டுமல்ல, இதற்கொப்பான ஒரு ஏற்பாட்டையே மேற்கொண்டார் இங்கிலாந்து நாட்டில் கிராம்வெல் எனும் பட்டமற்ற மன்னன்–பாதுகாவலன்.

பொருளாசை கொண்டோர் புனிதப் பணியாற்றிட மாட்டார்கள்—புனிதப் பணியாற்றி வரும் பாதிரிமார்களைக் கொண்டே ஆட்சி முறை கண்டிடல் வேண்டும், அவர்களே அறநெறி அறிந்துரைப்பர், அப்போதுதான் அறநெறி வழுவாத நிலை ஆட்சியிலும் சமூகத்திலும் இருக்கும் என்று திடமாக நம்பிய கிராம்வெல், பாராளுமன்றத்தைத் திருத்தி அமைத்தார்–பாதிரிமார் பார்லிமெண்ட் என்றே பெயரிடப்பட்டது அதற்கு; வரலாறு.

எனவே, சாதுக்களைச் சர்க்கார் நடத்திட அழைப்பரோ, கட்டுரையாளர் கேலிக்காக இதுபோல் கூறுகிறாரே என்று ஐயம் கொள்ள வேண்டாம், தங்கு தடையின்றி, கேட்பார் மேய்ப்பாரின்றி, இந்த பின்னோக்கிச் செல்லும் பயணம் மேற்கொள்ளப்படுமானால், கட்டுரையாளர் குறிப்பிடும் கட்டம் பிறந்திடக்கூடும். கிராம்வெல் செய்தே பார்த்தார். நடந்தது என்னவெனில், ஆட்சி மன்றத்தில் அமர்ந்ததும், பற்றற்ற பாதிரிமார்கள் தத்தமது விருப்பு வெறுப்பினைக் காட்டிடவும் அதற்காக வாதிடவும், போரிடவும் முனைந்து, பாராளுமன்றத்தைப் படுகளமாக்கிவிட, கிராம்வெல் கலக்கமும் துக்கமும் கொண்டு, அந்தப் பார்லிமெண்டையே கலைத்துவிட்டு, புனிதப் பணியாற்றிட பழயபடி ஆலயம் சென்றிடுக என்று அவர்கட்குக் கூறி அனுப்பிவிட்டான். உளவறியும் படை, போலீஸ் படை, கட்சித் தொண்டர் படை ஆகியவைகளால் சாதிக்கமுடியாத செயலைச் செய்திட சாதுக்கள் படையினால் முடியும் என்று நம்பிடும் நந்தா, அதே சாதுக்களால் மட்டுமே ஒழுங்கான, ஊழலற்ற ஆட்சி நடத்தமுடியும் என்ற நம்பிக்கையும் கொள்ள ஏன் தயங்கப்போகிறார். அதனால்தான் கட்டுரையாளர் கூறினார், இனி சர்க்காரின் நிர்வாக அலுவலகங்களில், வெளிவிவகாரத் துறையிலும் சாதுக்களே நியமிக்கப்படும் கால கட்டம் பிறந்திடக்கூடும் என்று.

> மாஸ்கோவிலும், வாஷிங்டனிலும், ஆசியப் பகுதியில் உள்ள சில முக்கியமான தூதராலயங்களிலும், சாதுக்களே கொலுவிருக்கக்கூடும் — எதிர்காலத்தில் — பழமையை நோக்கி நடந்திடும் எதிர்காலத்தில்!

என்று கூறியிருக்கிறார், கட்டுரையாளர்.

முற்போக்காளர்கள், இதனை ஏளன மொழி என்பர் ஆட்சிப் பொறுப்பில் உள்ளார் இதனை எறிச்சல் மூட்டும் பேச்சு என்பர், கேலி செய்து அறிவு புகட்டும் நேர்த்தியான முறையிலே அமைந்த பேச்சு இது என்று நான் கருதுகிறேன்.

சாதுக்கள்; இவ்விதம் சகல துறைகளையும் நிர்வகிக்கக் கிளம்பிடும் போக்கை வகுத்திட முற்படுவது பிற்போக்குத்தனம் என்று கண்டித்திடும் இக்கட்டுரையாளர், இன்று சகல துறைகளிலும் நடைபெற்றுக் கொண்டுள்ள நிர்வாக முறை சிறந்ததாக இருக்கிறது என்று கூறவில்லை—அதிலே காணப்படும் தவறையும் கண்டிக்கிறார்—கேலி மொழியால்.

> சாதுக்களை வெளிநாடுகளில் தூதராலயங்களில் நியமிப்பது நல்லதுகூட.

என்கிறார். இதென்ன சாதுக்களை நியமிக்கலாம் என்று பரிந்துரைப்பதுபோல் தோற்றமளிக்கிறதே இந்தப் பேச்சு என்று எண்ணி ஆயாசப்படுவீர்கள். ஆனால், இன்றுள்ள நிலையைக் கேலி செய்யவே இதுபோல் கூறுகிறார்.

> இன்று தூதராலய அதிபர் தூங்கிவிழுகிறாரல்லவா, தாம் அளித்திடும் விருந்துகளின்போது, அதனைவிட மேலாக இருக்குமல்லவா, சாது, அதிபர் ஆனால்! ஆசிரியப் பகுதியிலே வேலை பார்க்கச் சொன்னால் மறுத்துவிடுகிறார் அல்லவா, தூதராலய அலுவலர்; மனைவி, பாரிஸ் அல்லது ரோம்

நகர் வாழ்ந்திடவே விரும்புகிருர் என்ற காரணத்துக்காக, அதைவிட மேல்தான், சாது தூதராலய அலுவலராகிவிடுவது.

சாதுவுக்குக் குடும்பம் இல்லே, எனவே சுக வாழ்வுபற்றிய நினைவு எழக் காரண மில்லே.

விருந்தளிக்கமாட்டார்; வாழ்க்கைச் சுவையால் வசீகரிக்கப்பட்டு வீழ்ந்திடமாட் டார், ஏனெனில் வாழ்வே மாயம்! என்ப தல்லவா, சாதுவின் சித்தாந்தம்!!

கடுங்குளிர் தாக்கிடும் இடங்களில் மட்டுமே சாது அதற்குத்தக்க உடை அணிந் திடுவார்; பருவமாற்றத்தின் விளைவுகளேயும் கட்டுப்படுத்திவிடுவாரேல், உடைச் செலவும் இல்லே! சர்க்கார் பணம் விரயமாகாது.

நிர்வாகத் துறையில் சாது இடம்பெற்று விடுவாராளுல், மகத்தான மாறுதல் ஏற் படுத்திவிடுவார் — நாட்டவர் அனைவரும் சமாதி நிலே அடைவர்!

விழித்தெழுந்திடும்போது, செத்துக்கிடப் போம், அல்லது நாம் சமாதி நிலேயில் இருந்த போது நாட்டைப் பிடித்துக்கொண்ட வேற்ற வரின் காலின் கீழ் சிக்கிக்கிடப்போம். இருப் பினும், சாது மனப்போக்கின் காரணமாக இதனைப் பொருட்படுத்தமாட்டோம்; நடப்பது நிசமல்ல; நமக்கல்ல என்று எண்ணிக் கொள்வோம்.

இவ்விதமாகத் தம்பி! இன்றுள்ள நிலேயையும், எதை நோக்கி நாம் இழுத்துச் செல்லப்படுகிருேமோ அந்த நிலேயையும், மாறிமாறித் தாக்குகிருர்; முரட்டுத்தன மான தாக்குதல் அல்ல; மிக நேர்த்தியான முறையில்; உயர்தரமான நையாண்டி நடையில்.

உணவுப் பிரச்சினே குறித்து காங்கிரஸ் மேற் கொள்ளும் நடவடிக்கை சரியானதாக, பலன்தரத்தக்க தாக இல்லே என்ற கருத்தினேயும் கட்டுரையாளர் விளக்கிவிட்டு, அதன் தொடர்பாக, சாதுக்கள்பற்றிய நையாண்டியை மேலும் தருகிருர்.

உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நேரம், சாதுக்களே நாம் நாடிடப் பொறுத்த மான நேரமே! உணவு நெருக்கடி போக்கிட உற்பத்தியைப் பெருக்குவது, இறக்குமதி செய்வது கூடத் தேவைப்படாதல்லவா! (உபவாசம் இருந்திட) உணவு தேவை இல்லே என்று கூறிடத்தக்க நினைப்பு அருளுவர் சாதுக்கள்!!

சாதுக்களே நாடி அவர் துணையுடன் துரைத்தனம் நடத்த முனேந்துவிட்டோமா ளுல் உலகில் நமது நாட்டுக்கு தரப்பட்டுள்ள இடம் என்ன என்பதுபற்றியோ, காமன் வெல்த் மாநாட்டிலே நாம் பின் வரிசையில் தள்ளப்பட்டுக்கிடந்திட நேரிட்டது பற்றியோ, உலக நாடுகளிலே நமக்கு உற்ற நண்பர் களாக அதிகம்பேர் இல்லே என்பதுபற்றியோ ஆப்பிரிக்க பூபாகத்தில் சீன பாசவலே வீசு வது பற்றியோ, காஷ்மீர் குறித்துத் தான் கொண்டுள்ள போக்கே நியாயமானது என உலகினை நம்பவைத்திட பாகிஸ்தான் எல்லா விதமான முயற்சிகளிலும் ஈடுபடுவது பற்றியோ நாம் ஏன் கவலே கொள்ள வேண்டும்! உலகம் உண்மை என்று எண்ணு பவர்கள் இவைபற்றி எண்ணிக் கவலேப் படட்டும். (சாதுக்களால் நடத்திச் செல்லப் படும் நிலேபெற்ற) நமக்கு உலகம் வெறும் புகை! மாயம்! உலகை மறந்திடுவோம். உலக விஷயம் குறித்து எண்ணிக் காலத்தை வீணுக்குவானேன்!!

இவ்விதமாகக் கிண்டல் செய்கிருர் நயனதாரா! சாதுக் கள் ஒரு நாட்டின் அரசினே நடத்திச்செல்ல இடமளித் தால் மக்கள் என்னகதி பெறுவர் என்பதனே எடுத் துரைக்கிருர்.

உலகம் மாயை, வாழ்வு அனித்யம், என்ற நம்பிக் கையும், உண்டு உலவிட வேண்டும் என்று எண்ணுமல் உபதேசம் கேட்டு சமாதிநிலே அடைய வேண்டும் என்ற நோக்கமும்கொண்ட சமூகமாக்கப்பட்டுவிடு வோம், சாதுக்களே துரைத்தனம் நடத்தச் சொன்ஞல் என்பதனே எடுத்துரைக்கிருர். பிறகு சாதுக்கள் உண்மையாகவே நாட்டுக்கும் சமூகத்துக்கும் நல்ல தொண்டாற்ற விரும்பினுல், அதற்கு ஏற்ற இடம், நிர்வாகத்துறை அல்ல என்று திட்டவட்டமாகத் தெரி விக்கிருர். என்னென்ன செய்யலாம் இந்த சாதுக்கள் என்பதுபற்றியும் கூறுகிருர்.

இந்து மார்க்கத்தில் மூண்டுவிட்டுள்ள அழுக்குக் குட்டைகளே ஒழித்திடப் புனிதப் போர் தொடுக்கட்டும்.

திருக்கோயில்களிலே ஊழல் ஆட்சி நடத்தும் பூஜாரிகளின் புரட்டுகளே அம்பலப் படுத்தட்டும்.

மார்க்கத்தைத் தவருன வழியிலே நடத் திச் செல்வதை, வறுமை, அறியாமை ஆகிய வற்றின் பிடியிலே சிக்கியுள்ள மக்களேச் சுறண்டிடும் கொடுமையைக் கொதித் தெழுந்து எதிர்த்திடட்டும்,

தீண்டாமையை எதிர்த்துப்போரி டட்டும்.

தம்பி! இந்த அளவுக்குத் துணிந்து நீயோ நானே கூறி ஞல், எத்தனே ஆத்திரம் பீறிட்டுக்கொண்டுவரும், பழமை விரும்பிகளுக்கு. எண்ணிப்பார்! மதத்திலே ஊழல்கள் நெளிகின்றன, போக்குவார் இல்லே; சுரண் டல் நடக்கிறது, தடுப்பார் இல்லே; மூடத்தனம் மூடு

பனியாகக் கிடக்கிறது, அறிவு ஒளி அளித்திடுவார் இல்லை. சாதுக்கள், இந்த நிலையை மாற்றிடப் புனிதப் போர் புரிந்திடவேண்டும்; அதற்கு ஏற்றவர்கள் அவர்கள் என்ற கருத்துடன் கட்டுரையாளர் எழுதுகிறார்.

> மதத்துறையைவிட்டு வெளியே வேறு துறைகளிலும் சாது ஈடுபடவிருப்பம், கொண்டால் நமது நகரங்களிலே உள்ள குப்பை கூளம் அழுக்கு அனுசாரம் ஆகியவற்றைப் போக்கிடும் பணியினை மேற்கொள்ளட்டும்.

என்கிறார். சாதுக்களுக்கும் கோபம்வரும், மார்க்கக் காவலர்க்கும் மன உளைச்சல் ஏற்படும்; என்ன அக்ரமம், குப்பை கூளங்களை அகற்றிடும் வேலையையா செய்யச் சொல்கிறீர், மன அழுக்கைப் போக்கிட அவதரித்துள்ள மகான்களை என்று வெகுண்டுரைப்பர், என்ன செய்வது, கட்டுரையாளர் இவர்களின் கடும் கோபத்தைப் பொருட்படுத்துபவராகத் தெரியவில்லை. தயக்கம் தடுமாற்றமின்றி, அச்சம் கூச்சமின்றிக் கூறுகிறார்.

> வீதிகளிலே குவிந்துகிடக்கும் குப்பைகளை அப்புறப்படுத்த,
>
> சுவறுகளிலே ஒட்டப்பட்டுக்கிடக்கும் ஆபாசச் சுவரொட்டிகளை கிழித்தெறிய,
>
> வீதியிலே திரிந்துகொண்டிருக்கும் நாய்களை விரட்ட,
>
> ஊருக்கு நல்ல குடி தண்ணீர் கிடைத்திடும் வழிதேட,

இந்தப் பணிகளில் ஈடுபட முன்வரட்டும் சாதுக்கள் என்று கூறுகிறார்.

நாடும் சமூகமும் நல்ல நிலைபெற, எதிர்காலம் ஒளிமிக்கதாக இருந்திட, விஞ்ஞானத்தின் துணைகொண்டு, இன்னலைக்கண்டு அஞ்சாத மனப்பான்மையுடன் பணியாற்றி முன்னேற்றம் காணவேண்டுமேயன்றி, சாது சன்யாசிக் கூட்டத்திடம் கைகட்டி வாய் பொத்தி நின்று, காட்டுமிராண்டிக் காலத்தை நோக்கிப் பின்னேக்கிச் சென்றிடக் கூடாது; நேரு பண்டிதர் நமக்கு அளித்துச் சென்ற அறிவுரை அதுவே; அவர் காட்டியவழி நடப்போம்; மக்கள் காண அவர் உரைத்த இலட்சியங்களைக் காட்டுவோம், முன்னேற்றப் பாதையிலே நாம் நடைபோட நமக்கெல்லாம் துணிவு அளித்த நேருவின் உருவத்தை மக்கள் காணட்டும், கர்நாடக காலத்துக்கு நம்மைத் தள்ளிச்செல்லும் சாதுக்களின் உருவத்தை அல்ல! — என்று மிக உருக்கமாகக் கூறுகிறார். நந்தாவின் உள்ளம் நொந்துபடும்—சாதுக்கள் கோபித்துக்கொள்வர்; என்றாலும் உள்ளத்தில் பட்டதை உரைத்திடுவேன் என்கிறார் கட்டுரையாளர்.

தம்பி! சாது சன்யாசிகளைப் படைதிரட்டி, நாட்டிலே நெளியும் கேடுகளை ஒழித்திடப்போரிடும்படி நந்தா கூறுவது கேட்டு, முற்போக்காளர் அனைவரும் நயனதாரா வெளியிட்டது போன்ற கருத்தினையே பெறுவர். கவைக்குதவாத திட்டமாக இருக்கிறதே உள்துறை அமைச்சர் தீட்டியது என்று எண்ணிக் கவலை கொள்வர்.

தம்பி! எத்தகைய படையிடம் எத்தகைய போர் வகையைத் தந்திடவேண்டும் என்றறிந்து அவ்விதம் செய்தால் மட்டுமே, வெற்றி பெற்றிட முடியும் என்று கூறினேன்—நந்தா திரட்டிடும் சாதுக்கள் படை ஊழல் இலஞ்ச ஒழிப்புக்கு ஏற்றது அல்ல என்பதனை விளக்கிக் காட்டியுள்ளார் நயனதாரா,

சிற்சில காலத்தில் சிற்சிலருக்கு, கேடு களைந்திட வேண்டும் என்பதிலே ஆர்வம் எழுகிறது, செயல்பட முனைகின்றனர். ஆனால் அவர்கள் மேற்கொள்ளும் முறையும், திரட்டிடும் படையும், பயனற்றதாகி விடுவதால், வெற்றி கிடைப்பதில்லை.

இத்தாலி நாட்டிலே ஓர் காலத்தில், சமுகம் முழுவதும் கேடுகள் மிகுந்திருந்தன. ஒழுக்கம் அழிக்கப்பட்டுக் கிடந்தது. இதனைக் கண்டார், வேதனை மிகக் கொண்டார். இந்த நிலையினை மாற்றியாக வேண்டும் எனத் துடித்தார், செயலில் ஈடுபட்டார் ஒரு சிலர்.

அவருடைய ஆர்வம் போற்றிடத்தக்கது—ஐயமில்லை.

அவருடைய அறிவுரையை மறுப்பார் எவரும் இருந்திட முடியாது. அருளாளர் என்றும் அவரைக் கொண்டாடினர். பெயர் சவனரோலா.

பொய்யும் புரட்டும் ஒழிந்திட, அநீதியும் அக்ரமமும் அழிந்துபட, புனிதப் போர் தொடுத்தார், சவனரோலா! படை திரட்டினார் அப்புனிதப் போருக்காக.

படை எது தெரியுமா தம்பி! சன்மார்க்கத்தை மதித்திடும் ஆர்வமிக்க தொண்டர் படை போர் முறை?

கருப்புடை அணிந்து வலம் வருவர், புனிதப் போர் நடாத்திடும் படையினர் நகரத் தெருக்களில்—வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு கதறியபடி.

> தர்மம் அழிகிறதே தடுப்பார் இல்லையோ!
>
> அக்ரமம் நெளிகிறதே அழிப்பார் இல்லையோ!
>
> நீதி சாய்கிறதே, கேட்பார் இல்லையோ!

என்றெல்லாம் புலம்பியபடி வலம் வருவராம்.

வெற்றி கிட்டியதா என்றுதானே கேட்க விரும்புகிறாய் தம்பி! எப்படிக் கிட்டும்! அக்ரமக்காரன்தான் கண்ணீர் கண்டு கலங்கமாட்டானே! இதயம் இருந்தால் தானே, இளக! உள்ளம் உறங்காதிருந்தால்தானே,

உருக!! சவனரோலாவின் படை, பார்ப்போருக்கு இரக்க உணர்ச்சியை மட்டும் தந்திட உதவிற்று; சமூகக் கேடுகள் ஒழிந்துபட உதவவில்லை.

நந்தா உருகுகிருர், உள்ளம் துடிக்கிறது, ஊழல் மலிந்து கிடப்பது கண்டு; ஆனல் அதனை ஒழித்திட அவர் மேற்கொள்ளும் முறை, எனக்குத் தம்பி! துளசியைப் பகைவன் நுழையும் வழியிலே வீசிவைத்த மன்னனையும், மாபாவிகளைத் திருத்த மாரடித் தழுதிடும் படையைத் திரட்டிய சவனரோலாவையுந்தான் நினைவிற்குக் கொண்டு வருகிறது. நான் கூற எண்ணிய கருத்துக்களை நயனதாரா என்பவர், எனக்கு ஏற்படக் கூடியதைவிட அதிகத் துணிவுடனும் தெளிவுடனும் எடுத்துரைத்தார்—நான் அதனை எடுத்துரைத்தேன்.

சாதுக்களை, தம்பி! நந்தா மனிதப் பிறவியிலிருந்து மாறுபட்டவர்கள் என்று எண்ணுகிருரோ, அல்லது மேம்பட்டவர்கள் என்று கருதுகிருரோ எனக்குத் தெரியவில்லை.

சாதுக்களின் இயல்பும் நடவடிக்கையும், நிலையும் நினைப்பும் எப்படி உளது என்பதைக் கண்டறிந்து உண்மையை உணர்ந்திடத்தக்க விதமாக, நந்தாவுக்கு சாதுக் கூட்டத்திடம் எத்தனை எத்தனை ஆண்டுகளாக நெருங்கிய நேசமிகு தொடர்பு உளதோ, அதனையும் நானறியேன்.

ஆனல் ஆண்டு பல, சாது சன்யாசிகளிடம் நெருங்கிய தொடர்புகொண்டு, தூய்மையைத் தேடிய, ஒருவர்—சாதுக்கள் குறித்துக் கண்டறிந்து கூறினது பற்றி முன்னம் நான் படித்திருக்கிறேன்.

சாது சன்யாசிகள் என்ருலே கட்டோடு பிடிக்காதவரின் கருத்து அல்ல,

மதம் பொய், பூஜாரிகள் புரட்டர்கள் என்று எண்ணிடும் வழிதவறியவர்களின் வார்த்தை அல்ல, சீலம் பெறவேண்டும், அதனைப் பெற்றிட ஏற்ற இடம் சாது சன்யாசிகளின் சன்மார்க்கக் கூடங்களே என்று ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அவர்களிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டு வந்தவரின், கண்டுபிடிப்பு, நான் குறிப்பிடுவது. குப்பை கூளங்களைக் கிளறி இந்த நாட்டு மதத்தை இழிவுபடுத்த வேண்டும், புனிதத் தன்மையைப் பாழாக்க வேண்டும் என்ற கெடுமதி கொண்டவரின் கலகப் பேச்சல்ல — இந்து மார்க்கத்தைத் தழுவிக்கொண்டு எல்லையிலாப் பரம்பொருளைக் கண்டிட ஏங்கித் தவித்திட்ட ஓர் அம்மையாரின் மனக் குமுறல் நான் குறிப்பிடுவது. அமெரிக்க நாட்டிலிருந்து இங்கு வந்தமேயோ அல்ல—பிரிட்டிஷ் நாட்டிலிருந்து இங்கு வந்து, இந்த நாட்டைத் தாயகமாக்கிக்கொண்டு, பெயரையும் வாழ்க்கை முறையையும் மாற்றிக் கொண்ட ஓர் மாதரசியின் கண்டன உரை. போன மாதக் கப்பலில் வந்து இறங்கி பத்து நாள் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, சீமை திரும்பிச் சென்று, அரைகுறை அறிவினைக் காட்டிக்கொள்ளும் அவசரப் புத்திக்காரரின் அகம்பாவப் பேச்சு அல்ல, மீராபென் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டு; 'இந்தியக் கோலத்தை'ப் பெற்றுக்கொண்டு, மகாத்மா காந்தியின் 'சிஷ்யை'ஆகி, அவருடைய ஆசிரமத்தில் இடம்பெற்று 'ஆத்ம சக்தி'யின் அருமையினை உணர்ந்து, அதற்கேற்றபடி தமது வாழ்க்கையினை ஒழுங்குபடுத்திக் கொண்ட, உத்தமி என்று காங்கிரசின் பெருந்தலைவர்கள் கொண்டாடி வந்த அம்மையாரின் கொதித்த உள்ளத்தில் இருந்து கிளம்பிய சொற்கள். சாது சன்யாசிகளிடம் சர்வேசனைக் கண்டறியும் 'பரம இரகசியம்' இருக்கிறது; அவர்களின் உபதேசம் கேட்டு உயர்ந்திடலாம் என்று மீராபென், சாதுக்களை கண்டு வழிபடலானர். திருத்தலங்கள் பலவற்றிலே இருந்து வந்த சாதுக்களைத் தெரிசித்தார்—ஜென்மம் சாபல்யம் ஆகவேண்டும் என்பதற்காக. ஆனல் என்ன கண்டறிந்துகொண்டார்? அவரே கூறட்டும், தம்பி!

"1947ம் ஆண்டிலிருந்து 1950ம் ஆண்டு வரை, ரிஷிகேசத்துக்கு அருகிலுள்ள பசுலோக் எனும் இடத்தில் இருந்து வந்தபோது, சாதுக்கள் பிரச்சினையிலே உள்ள அசங்கியம் அவ்வளவையும் கண்டறிய வேண்டி வந்தது.

என் காதுக்கு எட்டிய விஷயங்களைக் கேட்டு நான் திடுக்கிடலானேன். தீர விசாரித்தறிவது என் கடமை என்று உணர்ந்தேன். நான் அதுபற்றி விசாரிக்க விசாரிக்க மேலும் மேலும் அதிகமான அக்ரமம், கொடுமைகள் நெளிவதைக் கண்டேன். சூதாட்டம், குடி, கூத்தி, கொலை இவைகளிலே மூழ்கிக்கிடந்தனர் சாதுக்கள். புனிதவான்களின் தலம் என்று மக்களால் நம்பப்படும் ரிஷிகேஸ் அரக்கர்களின் இருப்பிடம் என்பதை அறிந்து கொண்டேன்.

தம்பி! சாதுக்களைப்பற்றி, சாந்தமுனிவர் என்று சான்ருேர் கொண்டாடிய காந்தியாரிடம் சிஷ்யையாக இருந்த மீராபென் கூறியது இது. பத்திரிகைகளில் அறிக்கையே வெளிவந்தது, இந்துஸ்தான் டைம்ஸ் இதழ், இது குறித்து எழுதிற்று, மீராபென் கூறுவது போலவே நிலைமை இருக்கிறது என்று. அந்த இதழின் ஆசிரியர் மகாத்மாவின் மைந்தர்—தேவதாஸ் காந்தி.

பூலோக மாயையிலிருந்து விடுபட்டு; சாலோக சாமீப சாயுச்யப் பதவி பெற்றிட; அனித்ய வாழ்வை அகற்றிக்கொண்டு நித்ய வாழ்வு பெற; நிலையில்லா இன்பத்தை உதறிவிட்டு. பேரின்பம் பெற; மருள் மூட்டிடும் பொருளை எறிந்துவிட்டு, பரம்பொருளைக் கண்டிட வழி கூறிடும் மகான்கள், காவி கட்டிய இந்தச் சாதுக்கள் என்று நம்பிச்சென்ருர் மீராபென் அம்மையார்;

சாதுக்களின் தலைமைப்பீடமோ என்று எவரும் எண்ணிடத் தக்க ரிஷிகேசத்துக்கு. அங்கு அம்மையார் கண்டது,

சூதாட்டம்

கற்பைச் சூறையாடல்

கொலை

குடிவெறி

தம்பி! ஆண்டு பல வற்றுக்கு முன்பு நான் எழுதிய 'வேலைக்காரி'யில் கொலைக் குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள கொடியவன் ஒருவன் சாது வேடமிட்டுக் கொண்டு ஆசிரமம் நடத்தி அங்கு அழகிகளை மலராகக் கொண்டு காமவேளுக்குப் பூஜைசெய்துவந்தான்; அவனை உண்மைச் சாது என நம்பிக்கிடந்த ஒரு வாலிபன், யோகியாக வேடமணிந்து கிடந்தவன் போகி என்பதைக் கண்டறிந்து குமுறி, கொதித்தெழுந்து, கண்டனச் சொற்களை வீசினான் என்று எழுதியபோது, எத்தனை எத்தனை கண்டனம் என்மீது! எத்துணை எறிச்சல் கொண்டனர் பழமை விரும்பிகள். மீராபென் கூறிடும் நிலைமைக்கு என்ன பதில் கூறுவர்!

> பத்து ஆண்டுகள் பொறுத்துப் பார்த்தேன். சாதுக்கள் உலகம் தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் என்று, அதற்கான நேர்மைமிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்துக்கிடந்தேன்.
>
> ஆண்டு பல கழித்து நான் ரிஷிகேஸ் செல்கிறேன்—காண்பது என்ன? அவ்விடம் முன்புபோலவே பாபக்கூடமாக இருந்திடக் கண்டேன். பதறிப் போனேன். காவி உடையைக் காணவே சகிக்கவில்லை.

சாதுக்களின் 'கோட்டம்' எத்துணை தீமைகளின் பிறப்பிடமாக இருப்பிடமாக இருந்து வருகிறது என்பதனை எடுத்துக் காட்டியதுடன் விடவில்லை மீராபென்; இத்தகைய சாதுக்களை அரசு ஆதரிப்பது அக்ரமம் என்பதையும் கூறினார்.

> புனித ஸ்தலங்கள் என்பவைகளிலே புனிதவான்கள் என்று உலவிக்கொண்டுள்ள சாதுக்களைத் திருத்தி நல்வழிப்படுத்திட வேண்டிய அவசரப் பிரச்சினையைக் கவனியாமல், சர்க்கார் இந்த சாதுக்களை உற்சாகப் படுத்தி ஆதரவு காட்டுவது தவறு என்பது என் கருத்து.

இந்தக் கண்டனத்துக்குப் பிறகேனும் நிலைமை திருந்தியதா என்றால், இல்லை. இதற்குப் பிறகும் கும்பமேளாக்களிலே உடையற்று உலா வருகிறார்கள் இந்த சாதுக்கள். அவர்களுக்குள்ளே அமளி மூள்கிறது! அருவருக்கத்தக்க தீயசெயல்களில் ஈடுபட்டனர் என்று சிலர் பிடிபடுகின்றனர்; தண்டனை பெறுகின்றனர். மற்றவர்களோ மகேசன் அருளால் நாம் பிடிபடவில்லை! என்று எண்ணி, பூஜா மாடத்தில் கோலாகல வாழ்வு நடாத்திய படி உள்ளனர்.

ஒழுக்கக் கேட்டினை ஒழித்திட சாதுக்களைப் படை திரட்டி அனுப்புவதற்கு முன்பு நந்தா, சாதுக்களிடம் நெளிந்திடும் ஒழுக்கக் கேட்டினைப் போக்கிட வழி என்ன கண்டார், வெற்றி எந்த அளவு பெற்றார்! கரிக் கட்டையைக் கொண்டு உடலழுக்கைப் போக்கிட முனைகின்றாரே!! முறையா?

> பாதையிலே காவி உடையினன் வரக் கண்டால், புரட்டன் வருகிறான் என்று மக்கள் உடனடியாக உணர்ந்து உரைக்கின்றனர். கண்மூடித்தனமாக சாதுக்களை வழிபட்டு வந்த சாமான்யர்களுக்குக்கூட, சாதுக்கள் பற்றி சந்தேகங்கள் எழும்பிவிட்டன

என்று எழுதுகிறார் மீராபென்; நந்தா மட்டும் துளியும் சந்தேகப்படவில்லை, சஞ்சலப்படவில்லை!, சாதுக்கள் படை திரட்டி புனிதப் போர் நடத்தி வெற்றி காணலாம் என்று எண்ணுகிறார்!

இந்தப் படை கொண்டு எந்தப் புனிதத்தைக் காண்பாரோ நானறியேன்; ஒன்று மட்டும் புரிகிறது தம்பி! நந்தா உலவிடும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே, நகைத்துப் பேசிடும் விஷயமாகிவிட்டது இவர் சாதுக்களைப் படை திரட்டிடும் செயல்.

என்றாலும் அவர் அமைச்சர்—படை அமைக்கிறார். துளசியை வீசினாலுமே மன்னன்! தடுத்திட முடிந்ததா, கேட்டிடும் துணிவு பிறந்ததா!

எனவேதான், தம்பி! நந்தாவின் இந்த முயற்சியைத் துணிவுடன் கண்டித்து எழுதிய நயனதாராவின் கட்டுரையைக் கண்டு, வியந்து பாராட்டினேன்—உன்னிடமும் கூறினேன்.

அண்ணன்,



அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

13964

அந்திக்கலம்பகம்

"என்ன ஏமு! என்னமோபோல இருக்கிற, காரணம்?"

"எதாவது சச்சரவு ஏற்பட்டிருக்கும் அவரோடு..."

"பட்டுவுக்கு எப்போதும் இந்த நினைப்புதான். நாங்கள் என்ன பால்யமா சண்டை சச்சரவுகளிலே ஈடுபட..."

"அதென்ன ஏமு அப்படிச் சொல்லிவிட்டே. புருஷனும் மனைவியும் சச்சரவிட்டுக்கொள்வதற்காகத் தானு வாலிபம் இருக்கு. பைத்யமே! வாலிபப் பருவத்திலேதான், இருவரும் சிரித்துப் பேசி மகிழ்ச்சியாக இருப்பார்கள். சிடுசிடுவென்று இருக்கும் சுபாவம் வயதாக வயதாகத்தான் ஏற்பட்டுவிடும்"

"எப்படிச் சொல்லலாம். சிடுசிடுவென்று வாலிபப்பருவத்திலே இருக்கிறவர்களைப் பார்த்திருக்கிறேனே"

"வயதான பிறகும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துபவர்களும் இருக்கிருர்கள் பட்டு! நான் பொதுவாகச் சொல்கிறேன். வாலிபப் பருவத்திலே கவலை அதிகம் ஏற்படாது; வயது ஆகஆக எத்தனையோ விதமான கவலைகள் தன்னுலே ஏற்பட்டு விடும்; எதிலேயும் பிடித்தம் குறையும்; எதற்கு எடுத்தாலும் ஒருவிதமான எரிச்சல் ஏற்பட்டு விடும்..."

"அது வயதானதால் வருவது என்று கூறிவிட முடியாது, ஏதாவது நோய்நொடி ஏற்பட்டால்கூட அப்படிப்பட்ட நிலை உண்டாகிவிடக் கூடும்..."

"உண்மைதான் பட்டு! ரஷிய ஆராய்ச்சியாளர்கள், நரம்புகளின் அமைப்பின்படி சுபாவம் அமைகிறது என்று கண்டுபிடித்திருக்கிருர்கள் என்று ஒரு புத்தகத்தில் பார்த்தேன். அது இருக்கட்டும் நாம இரண்டுபேரும் பேசிக்கொண்டு இருக்கிறேம் ஏமு, 'உம்'மென்று இருக்கிருளே..."

"கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன், நீங்கரெண்டுபேரும் பேசிக்கொண்டிருப்பதை..."

"கேட்டுக்கொண்டிருக்கிருளாம், கேட்டயா, பொன்னி! எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதை அக்கறை துளிகூட இல்லாமல் கேட்டுக்கொள்கிற காங்கிரஸ் மந்திரிபோல......"

"எனக்கு ஏண்டிம்மா மந்திரி வேலை..."

"பட்டு! ஏமுவுக்குப் பயம். இப்போது ஒவ்வொரு காங்கிரஸ் மந்திரியின்பாடும் திண்டாட்டமாக இருக்குது பார், அதனுலே..."

"இங்கே முதல் மந்திரி பக்தவத்சலத்துக்கு சிவஞான கிராமணியார்

கருப்புக்கொடி காட்டினாராமே, உண்மையா பொன்னி!''

"இல்லையே! சிவஞான கிராமணியார் கருப்புக்கொடி காட்டவில்லையே. அவருடைய தமிழரசுக்கட்சி காட்டிற்று.''

"வக்கீல் அல்லவா, அதனாலே திட்டவட்டம் பேசரு. கிராமணியார் கட்சி கருப்புக்கொடி பிடித்தாலென்ன, அவரே பிடித்தாலென்ன இரண்டும் ஒன்றுதான், ஏமு! தமிழை போதனாமொழியாக ஆக்கத் தவறியதற்காகக் கண்டனம் தெரிவிக்க, கருப்புக் கொடி...''

"எனக்கு இந்தக் கருப்புக்கொடி, ஆர்ப்பாட்டம், மறியல், போராட்டம் இதெல்லாம் பிடிக்காது பொன்னி!''

"உனக்குப் பிடிக்காதது எது, பிடித்தது எது என்று பார்த்தா அவரவர்களும் காரியங்களைச் செய்து கொண்டிருப்பா.''

"ஏமு! பட்டு சொல்வதுபோலச் சிலபேர், கருப்புக்கொடி காட்டுவது, கிளர்ச்சி செய்வது என்பதெல்லாம் கூடாது என்று பேசுவதுண்டு. அதைப் பெரிய மேதாவித்தனம் என்றுகூடச் சொல்லிக்கொள்பவர்களும் உண்டு. ஆனால் ஜனநாயகத்திலே ஆளுகிற கட்சி ஒழுங்காக இல்லாமலிருந்தால், பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொண்டிருப்பதில்லை; இருப்பதும் நல்லதில்லை. நாம் எது செய்தாலும் யாரும் ஒன்றும் கேட்கமாட்டார்கள்; எல்லாம் நாமே! என்ற எண்ணம் ஏற்பட்டுவிடும். அந்த எண்ணம் ஏற்பட்டுவிட்டால் ஜனநாயகம் கெட்டுப்போகும். அப்படி ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த கருப்புக்கொடி, கிளர்ச்சி, மறியல், ஆர்ப்பாட்டம், போராட்டம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவைகள். இது எந்த ஜனநாயக நாடுகளிலும் உண்டு...''

"ஆனா பொன்னி! சில இடங்களிலே, சட்டசபைகளையே படுகளமாக்கி விடுவது முறையில்லையே. ரொம்ப அசங்கியமாக இருக்கிறதல்லவா? இதை எல்லாம் படித்துப் பார்த்தா வெளிநாட்டுக்காரர்கள் நம்மைப் பத்தி என்ன நினைப்பா? கேவலமாகத்தானே எண்ணிக் கொள்ளுவா!''

"அதைச் சொல்லிவிட்டயே பட்டு! கோண்டா தேர்தலிலே காங்கிரஸ்காரர் வெற்றிபெற நடத்தப்பட்ட தில்லுமுல்லுகளைப் பத்தின செய்தி வந்ததே அதைப் படிக்கிற வெளிநாட்டுக்காரர், நம்ம நாட்டு ஜனநாயகத்தைப் பத்தி என்ன எண்ணிக் கொள்ளுவா...''

"ஜனநாயகம் இங்கே கேலிக்கூத்தாகிவிட்டிருக்கிறது என்றுதான். ஆனா பொன்னி! இந்தச் சம்பவத்தைப்பத்தி படிக்கிற வெளிநாட்டுக்காரர், நம்ம நாட்டு நீதிபதிகள் நேர்மையாக துணிவாக நடந்துகொள்வதுபற்றிப் பாராட்டுவா, இல்லையா...''

"அது உண்மைதான் பட்டு! அமெரிக்க பெரிய வழக்கு மன்றத்திலேகூட, இங்கே நம்ம நாட்டிலே தரப்பட்டுள்ள சில தீர்ப்புகளை மேற்கோள் காட்டினாளாமே.''

"அது, நமது நீதிமன்ற முறை சிறப்பானது என்பதைத்தானே காட்டுகிறது.''

"ஆமாம், ரஷியாவிலே இதை விடச் சிறப்பாக இருக்கிறதாமே...''

"எப்படிச் சொல்லிவிட முடியும். ரஷிய கோர்ட்டுகளிலே பயிற்சி பெற்ற நீதிபதிகளோடு, சாதாரண மானவர்கள்—வேறு துறைகளிலே உள்ளவர்களும் உட்கார்ந்து வழக்கை நடததுகிறார்கள். அவர்கள் எப்படி, சட்ட நுணுக்கம் தெரிந்து வழக்கை நடத்தமுடியும்.''

"நன்றாக நடத்துகிறார்கள் என்று இங்கிருந்து ரஷியா சென்று இந்த விஷயமாகப் பார்த்துவிட்டு வந்தவர் கூறியிருக்கிறாரே...''

"என்னமோ பொன்னி! எனக்கு இதுபற்றி அவ்வளவாகத் திருப்தி இல்லை.''

"சாதாரணமானவர்களும் வழக்கை விசாரிக்கலாம், நடத்தலாம், தீர்ப்பு தரலாம் என்று ஆகிவிட்டால், பிறகு தன்னைப்போல வக்கீல் படிப்பு படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்க நேரிடும் என்ற பயம் போல இருக்குது நம்ம பட்டுவுக்கு.''

"ஆரம்பமாகிவிட்டதா கேலிப் பேச்சு...''

"பேசட்டும் பட்டு! ஏமு எதுவும் பேசாமலிருப்பது என்னமோபோல இருக்குது. ஏமு! என்ன காரணம் இப்படி இருக்க? மனதிலே ஏதாவது விசாரமா?''

"இப்படிக் கேட்கவில்லையே நம்மவர் என்ற கவலை பாவம், ஏமுவுக்கு...''

"ஆமாண்டி! அவர் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, கண்ணே! என்ன கவலை! உன் முகம் வாடினால் என் மனம் வாடுகிறதே! நான் எதையும் சகித்துக்கொள்வேன், ஆனால் உன் முகம் வாட்டமாக இருப்பதை மட்டும் சகித்துக்கொள்ளவே முடியாது என்று நாடகபாணியிலே பேசவில்லையே என்று வருத்தம். போதுமா. திருப்தியா...''

"இதற்கு ஏன் ஏமு! இவ்வளவு கோபம். என்னதான் சங்கடம் உனக்கு...''

"ஏமு! என்ன உடம்புக்கு? மனச் சங்கடமாக இது தெரியவில்லை. உடம்புக்கு என்ன?''

"உடம்பு என்னமோ போலத்தான் இருக்குது பொன்னி! கைகால் ஒரே வலி. மூட்டுக்கு மூட்டு வலி. இலேசாக ஜுரம் இருக்கும் போலத் தெரியுது...''

"ஓ! அதுதானா, பொன்னி! ஏமு பயந்து விட்டிருக்கிறா, டிங்கி ஜுரம் வந்துவிடும் என்று, ஊரிலே டிங்கி ஜுரம் பரவி இருக்குதே அதனாலே. டிங்கி ஜுரம் முதலிலே கைகால் வலியோடுதான் ஆரம்பமாகுதாமே...''

"அடி பைத்யமே! அதனாலேதானா பயந்துவிட்டிருக்கறே ஏமு! இப்ப பரவி இருக்கிற ஜுரம், டிங்கி அல்ல என்று வைத்திய ஆராய்ச்சிக்காரர் கூறி இருக்கிறார். வெறும் அசதியாக்கூட இருக்கும். டிங்கி காய்ச்சல் தான் என்று எண்ணிக்கொண்டு ஏன் வீணா மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறே. டாக்டரிடம் காட்டினையோ...''

"போகணும், தன்னாலே நின்றுவிடும்னு இருந்துவிட்டேன். நிற்காதுபோல இருக்குது. டாக்டரைப் பார்த்தாகணும்னுதான் நினைக்கிறேன்......''

"வீட்டிலே கொசுத் தொல்லை அதிகமோ......''

'நிறையத்தான் இருக்குது.''

"அழுக்குத் தண்ணீர் தேங்க விடக்கூடாது. அதிலேதான் கொசுக்களே உற்பத்தியாகிறதாம்.''

"பட்டு! நல்ல தண்ணீரிலே கூட கொசுக்கள் உற்பத்தியாகிவிடுவதாக ஒருவர் கூறி இருக்கிறார். கொசு ஒன்றுதானா நோய் உண்டாக்குது. ஈ என்ன இலேசுப்பட்டதா? ஈயினாலே ஏற்படுகிற வியாதிகளும் நிறைய......''

"இப்படி வியாதிகளை உண்டாக்குவதற்காகவே இந்த ஈக்களும் கொசுக்களும் வளருவது ஏனோ...''

"ஈ கொசு மட்டுமில்லா ஏமு! நோயை உண்டாக்குகிற கிருமிகள் மொத்தம் 999 இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்."

"எலியாலேதான் பிளேக்வருதாமே........."

"எலியாலே பிளேக் வருவதில்லே. பிளேக் பூச்சி எலியைப்பிடித்துக் கொள்கிறது — எலி அதனாலே வேதனைப்படுகிறது—பிறகுதான் பிளேக் பூச்சிகள் பெருகி, மக்களைப் பிடித்துக்கொள்கிறது."

"இப்படி மக்களுக்கு நோய்மூட்டி விடுகிற பூச்சி புழுக்கள் கொஞ்ச நஞ்சமாகவா இருக்குது. அடே அப்பா! ஈக்கள் எவ்வளவு பெருத்து விடுது......"

"ஏமு! ஈக்கள் பெருத்துவிடுவதைச் சொல்கிருயே! ஈ எவ்வளவு வேகமாக விருத்தி ஆகிறது தெரியுமா. ஆறே மாதத்தில் 558 - கோடியே 97 இலட்சத்து 20000 - ஈக்கள் பிறந்துவிடுவதாக ஒருவர் கணக்குக் கூறியிருக்கிறார்..."

"என்னடி அதிசயம் இது. ஆறே மாதத்தில் கிட்டத்தட்ட 559 கோடி ஈக்களா உற்பத்தி?"

"ஆமாம்! பத்து நாளைக்கு ஒரு தலைமுறை தோன்றிவிடுகிறதாம்—ஈக்களில்..."

"பாரேன் அதிசயத்தை. இவ்வளவு ஈக்கள் இருந்தா தொல்லை தான்..."

"அதனால்தான், சர்க்கார்கூட ஈ ஒழிப்பு வாரம் நடத்துகிறார்கள்..."

"அவா நடத்துவா எதற்கு எடுத்தாலும் ஒரு வாரம்! வனமகோத்சவம் நடத்தவில்லையா, அதுபோலத் தான் இதுவும்..."

"ஏமு! சர்க்காருடைய நடவடிக்கையிலே குறை இருக்குது. கண்டிக்க வேண்டியதுதான். ஆனா நம்ம ஜனங்களிடமும் சுத்தம் சுகம் தரும் என்ற எண்ணம் அதிகமாகப் பரவ வேண்டும்."

"நான் ஒரு பேப்பர்லே பார்த்தேன் பூச்சிகள் பிடித்து விடுவதாலேதான், பயிர் நாசமாகுதாம், ஏராளமான அளவு..."

"ஆமாம். எலிகளால் வேறே அழிவு உண்டாகுதாம் பயிருக்கு."

"இந்த எலிகள் பொன்னி! கதிர் முற்றிய உடனே அப்படியே கத்தரித்து எடுத்துக்கொண்டு போய், வளைகளிலே வைத்துக் கொள்ளுமாமே..."

"ஆமாம் ஏமு! வேண தானியம் வீணாகிப்போகுது இதனாலே. குரங்குகளால் வருகிற தொல்லை எவ்வளவு தெரியுமோ..."

"ஈ, கொசு, எலி இவைகளைக் கொல்லலாம். குரங்கை என்ன செய்வது? கொல்ல முடியாதே..."

"ஏன்! பாபம் என்கிருயா! எந்த உயிரைக் கொல்வதும் பாபம் என்றுதான் சாஸ்திரம் சொல்லுது. ஆனா ஈ கொசு எலி இவைகளைக் கொல்லலாம் என்கிறயே..."

"போடிம்மா பொன்னி! நான் உலக வழக்கத்தைச் சொன்னேன். என்னுடைய தீர்ப்பா அது..."

"தெரியும் ஏமு! தெரியும்! குரங்கு என்ற உடன் உனக்கு அனுமாரின் நினைவு—"

"வானரசேனை பற்றிப் பிரமாதமான வர்ணனை இருக்குது ராமாயணத்திலே..."

"இருக்குது பட்டு! ஆனா வானர சேனை என்றால் குரங்குதான் என்று சொல்வதற்கில்லை என்ற ஒரு கருத்து இருக்குதே தெரியுமா உனக்கு..."

"இதென்னடி பொன்னி! புதுசா ஒரு கரடிவிடறே"

"நான் கரடியும்விடலே கவாத்தும் காட்டலலே ஏமு! வானரம் என்பது குரங்கு அல்ல, குரங்குச் சின்னம் வைத்துக்கொண்டிருந்த ஒரு இனத்தவராக இருக்கலாம். அவர்கள் செயற்கை வால் வைத்துக்கொண்டு இருந்திருக்கலாம் என்று......"

"...என்று உங்க சுயமரியாதைக்காராள் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்தார்களாக்கும்......"

"சுரீல் என்று வருகிறதேகோபம். வானரம் குரங்கு அல்ல என்று மட்டுமல்ல ஏமு! திரௌபதி, திபெத் நாட்டு அழகி; திபேத்திலே தான் ஒரு பெண்ணைப் பல புருஷர்கள் மணம்புரிந்துகொள்ளும் பழக்கம் இருக்கிறது. அதனாலே, தர்மராஜா சுவர்க்கம் சென்றார் என்று பாரதத்திலே சொல்லப்படுகிறதே அதைப் படித்துப் பார்க்கும்போது சுவர்க்கம் திபேத்திலே தான் இருக்கும் என்று தெரிகிறது........"

"என்றெல்லாம் சொல்கிற சுயமரியாதை இயக்கத்தவா, சொல்லுவா பொன்னி! எதையும் சொல்லுவா. துணிச்சலுக்கு என்ன பஞ்சம்......"

"ஏமு! நான், இப்படி இப்படிச் சொல்லப்பட்டிருக்குது என்றுதான் சொன்னனே தவிர சுயமரியாதை இயக்கத்தவா சொல்வதாக சொன்னேன்."

"வேறேயாரடி இப்படிப்பட்ட குண்டுசளை'வீசுவா..."

"யார் சொன்னது என்றுதான் நிதானமாகக் கேளேன். வானரம் குரங்கு அல்ல; திரௌபதி திபேத் நாட்டு அழகி என்றெல்லாம் சொன்னவர், சுயமரியாதைக்காரர் அல்ல; ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளிலே வல்லவர், பெரிய நீதிபதி. ராஜமன்னார் சொன்ன கருத்து இது..."

"என்னது, என்னது, நீதிபதி ராஜமன்னார் கருத்தா? அவரா சொன்னார்?"

"ஆமாம் ஏமு! அவர் சொல்லி சுதேசமித்திரனில் வந்ததைத்தான் நான் சொன்னேன். 1957ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் நாலாம் தேதி சென்னையில், தென்னிந்திய புதைபொருள் ஆராய்ச்சி சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் ராஜமன்னார் பேசி இருக்கிறார் இது போல..."

"தலையே சுத்துதுடி பொன்னி! ராஜமன்னாரா இப்படிச் சொன்னார்......"

"உண்டா இல்லையான்னு உங்கள வரையே வேணுமானா கேட்டுப் பாரேன்."

"கேட்கத்தான் போறேன்... அதோ அவரும் வந்துவிட்டார்..."

"வா பட்டு! நாம புறப்படுவோம். ஏமு! டாக்டர் வீட்டுக்குப் போய் விட்டுவரட்டும்..."

❀

இன்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என்.ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.